## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا
كُتِبَ عَلَيۡكُمُ الصِّيَامُ
كَمَا كُتِبَ عَلَى الَّذِيۡنَ
مِنۡ قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டு போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம். (2:184)


بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ  نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ  وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

இதழ் 13

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

27 ஷஃபான் 1443 ஹிஜ்ரி கமரி 31 அமான் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 31 மார்ச் 2022


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ரஷ்யா – உக்ரைன் நெருக்கடி தொடர்பாக உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அறிக்கை

வரலாற்றிலிருந்து, குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டில் நடந்த பெரும் பேரழிவை ஏற்படுத்திய இரண்டு உலகப் போர்களிலிருந்து அவர்கள் படிப்பினைகளை பெற வேண்டும் என்று நான் பல ஆண்டுகளாக உலகின் வல்லரசுகளை எச்சரித்து வருகிறேன். சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் உண்மையான நீதியைக் கடைப்பிடிப்பதன் மூலம், உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், தமது சமுதாய மற்றும் தனிப்பட்ட நலன்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு இது சம்பந்தமாக கடந்த காலங்களில் நான் கடிதம் எழுதியுள்ளேன்.

தற்போது உக்ரைனில் போர் தொடங்கியுள்ளது மிகவும் வருந்தத்தக்க விஷயம் ஆகும். நிலைமை மிகவும் மோசமாகவும் ஆபத்தாகவும் மாறி விட்டது. மேலும் ரஷ்ய அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், நேட்டோ மற்றும் பெரும் வல்லரசுகளின் பதிலடியைப் பொறுத்து இந்தப் போர் இன்னும் பெரிதாகி விடக் கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி அதன் விளைவுகள் பயங்கரமானதாகவும், மிகவும் அழிவிற்குரியதாகவும் இருக்கும்.

எனவே மேலும் போர் மற்றும் வன்முறை தொடராமல் தவிர்ப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவது காலத்தின் கட்டாயமாகும். உலகம் பேரழிவின் விளிம்பில் இருந்து பின்வாங்கி விடுவதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது.

எனவே மனித இனத்தின் நன்மைக்காக ரஷ்யா, நேட்டோ மற்றும் அனைத்து பெரிய வல்லரசுகளும் மோதலைத் தணிக்க முயல்வதிலும், பேச்சுவார்த்தை மூலம் அமைதியான தீர்வு காணும் பணியிலும் தங்கள் அனைத்து முயற்சிகளையும் ஒருமுகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில், உலக அமைதிக்கு முன்னுரிமை அளிப்பதன் பக்கமும், தேசிய நலன்கள் மற்றும் பகைமைகளை அனைத்து மனித குலத்தின் நலனுக்காக ஒதுக்கி வைப்பதன் பக்கமும், உலக அரசியல் தலைவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு மட்டுமே என்னால் முடியும்.

எனவே உலகத் தலைவர்கள் அறிவுடனும், விவேகத்துடனும் செயல்பட்டு மனித குலத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும் என்பதே எனது உள்ளார்ந்த பிரார்த்தனையாக இருக்கின்றது.

போர், இரத்தம் சிந்துதல் மற்றும் அழிவுகளின் தண்டனையிலிருந்து இன்றும் எதிர்காலத்திலும் மனித குலத்தைக் காப்பாற்றிடவும், பாதுகாக்கவும் உலகத் தலைவர்கள் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.

எனவே பெரும் வல்லரசுகளின் தலைவர்களும் அவர்களின் அரசாங்கங்களும் நமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் அடுத்த தலைமுறையினரின் எதிர்காலத்தையும் அழிக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என்று என் இதயத்தின் ஆழத்தில் இருந்து நான் பிரார்த்திக்கிறேன். இன்னும் கூறப்போனால் அவர்களின் ஒவ்வொரு முயற்சியும், உந்துதலும் நம்மைப் பின்தொடர்ந்து வரும் சந்தியினருக்கு அமைதி மற்றும் வளம் நிறைந்த உலகத்தை நாம் வழங்கி விட்டு செல்வதை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.

உலகத் தலைவர்கள் காலத்தின் தேவைக்கு செவிசாய்ப்பதோடு எல்லாவற்றிக்கும் மேலாக, உலகின் அமைதி மற்றும ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான தமது கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹ் அனைத்து அப்பாவி மக்களையும், தற்காப்பற்ற மக்களையும் பாதுகாப்பானாக. உலகில் உண்மையான மற்றும் நிலையான அமைதி நிலவட்டுமாக. ஆமீன்.

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் உலகளாவிய தலைவர்

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷல் – இலண்டன்)

## நபிமொழி

### நோன்பு கேடயம் ஆகும்

1794: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள்அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பு கேடயம் ஆகும். எனவே எந்த நபரும் ஆபாசமான பேச்சுக்களையும், அறிவீனமான கூற்றுக்களையும் பேச வேண்டாம். எவராவது ஒருவர் அவரிடம் சண்டையிட்டால் நான் நோன்பாளி என அவர் இரு முறை கூற வேண்டும். எனது உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நோன்பாளியின் வாயின் துர்நாற்றம் கஸ்தூரியை விட அல்லாஹ்விற்கு விருப்பத்திற்குரியதாகும்.

1796: ஹஸ்ரத் சுஹைல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சொர்க்கத்தில் ஒரு வாசல் உள்ளது. அதனை ரய்யான் என்று கூறுவார்கள். கியாமத் நாளன்று நோன்பாளி அதன் வழியாக நுழைவார். அவரைத் தவிர வேறெவரும் அதன் வழியாக நுழைய மாட்டார். நோன்பாளி எங்கே? என்று கேட்கப்படும். அப்போது அவர் எழுந்து நின்று விடுவார். நோன்பாளியைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார். எனவே அவர் நுழைந்தவுடன் அந்த வாசல் அடைக்கப்பட்டு விடும். பின்னர் எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார். (சஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் – நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*உக்ரைன் – ரஷ்யா நெருக்கடி தொடர்பாக ஹுஸூர் அவர்களின் அறிக்கை*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 18 & 25 பிப்ரவரி 2022*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உலகம் முழுமையாக முயற்சி செய்யட்டும். தனது அனைத்து ஆற்றல்களையும், கூட்டங்களையும் ஒன்று கூட்டிக் கொள்ளட்டும். கிறிஸ்தவ அரசர்களும் அவர்களின் அரசாங்கங்களும் ஒன்றுகூடி கொள்ளட்டும். ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஒன்றுகூடி கொள்ளட்டும். உலகின் அனைத்து பெரும் பெரும் செல்வந்தர்களும், ஆற்றல் வாய்ந்த சமுதாயங்களும் ஒன்றிணைந்து கொள்ளட்டும். அவர்கள் இந்த நோக்கத்தில் என்னை தோல்வியுறச் செய்வதற்காக ஒன்றிணைந்து கொண்டாலும் பரவாயில்லை. அதன் பிறகும் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். அவர்கள் எனக்கெதிரில் தோல்வியுறுவார்கள். இறைவன் எனது துஆக்கள் மற்றும் திட்டங்களுக்கு முன்னால் அவர்களின் அனைத்து திட்டங்களையும், சதிகளையும், ஏமாற்று வேலைகளையும் அழித்து விடுவான். இறைவன் என் மூலமாக அல்லது எனது சீடர்கள் மற்றும் தொண்டர்கள் மூலமாக இந்த முன்னறிவிப்பின் உண்மையை நிரூபணம் செய்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காரணமாகவும், இஸ்லாத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுவான். இஸ்லாம் மீண்டும் தனது முழுமையான அழகுடன் உலகில் நிலைபெற்று விடாத வரை அவன் உலகை விட்டு விட மாட்டான். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களை மீண்டும் உலகின் உயிருள்ள நபி என்று உலகத்தை ஒப்புக் கொள்ளச் செய்யாத வரை இறைவன் உலகை விட்டு விட மாட்டான்**

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்களின் புகழுக்குரிய நற்பண்புகளை குறித்து ஈமானை வலுவூட்டும் பேருரை**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **18 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நாம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 20 ஆம் தேதியன்று முஸ்லிஹ் மவ்ஊது முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு கூட்டங்கள் நடத்துகின்றோம். மேலும் அந்த நாளையும் நினைவு கூருகின்றோம். இஸ்லாத்தின் மீது எதிரிகள் செய்த ஆட்சேபனைகளுக்கு பதிலாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு மகனின் பிறப்பைப் பற்றி முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். மேலும் அல்லாஹ்விடமிருந்து செய்தி கிடைக்கப் பெற்று அறிவித்தார்கள். இஸ்லாம் எந்த அடையாளத்தையும் காட்டுவதில்லை என்று இஸ்லாத்தின் எதிரிகள் கூறுகின்றனர்.

அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இறைவனிடமிருந்து தகவல் பெற்று கூறுகின்றேன். இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கான ஒரு மாபெரும் அடையாளம் என் மூலமாக முழுமை பெறும். அது என்னவென்றால், எனது ஒரு மகனின் பிறப்பு ஆகும். அவர் நீண்ட ஆயுளைப் பெறுவார். இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவார். இன்ன இன்ன சிறப்பம்சங்கள் அவரிடம் இருக்கும் என்றும் அன்னார் (அலை) கூறினார்கள்.

சுமார் 52, 53 சிறப்பம்சங்களை அன்னார் எடுத்துரைத்துள்ளார்கள். அது ஒன்றும் சாதாரண முன்னறிவிப்பாக இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தையும் கூறியிருந்தார்கள். எவ்வாறிருப்பினும் அந்த குறிப்பிட்ட காலத்திலேயே அந்த மகன் பிறந்தார். அவர் நீண்ட ஆயுளைப் பெற்றார். மேலும் இஸ்லாத்திற்கு அசாதாரண தொண்டுகள் ஆற்றுவதற்கு அவருக்கு நற்பேறும் கிடைத்தது. ஒவ்வொரு ஆண்டும் இந்த முன்னறிவிப்பு தொடர்பாக பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் ஜமாஅத் கூட்டங்களில் ஒளிபாய்ச்சப்படுகின்றன. இந்த வருடமும் இன்ஷா அல்லாஹ் இவை அனைத்தும் நடைபெறும். பல்வேறு ஜமாஅத்துகளில் ஜல்ஸாக்கள் நடைபெறும். அதேபோன்று MTA விலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். அவற்றிலிருந்து விளக்கங்கள் தெரிந்து கொண்டே செல்லும்.

தற்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் சொந்த சொற்களில் அன்னாரின் ஆரம்ப வாழ்க்கை எவ்வாறு இருந்தது? மேலும் அன்னாரின் உடல் ஆரோக்கியம் எப்படி இருந்தது? அன்னாருடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொண்டான்? போன்றவற்றைக் குறித்து சில ஆதாரங்களை எடுத்து வைப்பேன்.

அந்த முன்னறிவிப்பு நீண்ட ஆயுள் பெறக் கூடிய பிள்ளையைக் குறித்ததாக இருந்தது. ஒரு பிள்ளை நீண்ட ஆயுளைப் பெறும் என்பது முன்னறிவிப்பாக இருந்தது. நீண்ட ஆயுளைப் பெறக் கூடிய அந்த பிள்ளையின் உடல் ஆரோக்கியத்தை நீங்கள் இந்த விஷயத்திலிருந்தே கணித்துக் கொள்ள முடியும். அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் சுயமே கூறுகின்றார்கள்:

குழந்தைப் பருவத்தில் எனது ஆரோக்கியம் மிகவும் பலவீனமாக இருந்தது. முதலில் எனக்கு கக்குவான் இருமல் ஏற்பட்டது. பின்னர் எனது உடல்நிலை எந்த அளவிற்கு மோசமானது என்றால் 11, 12 வயது வரை மரணம் மற்றும் வாழ்க்கைக்கான போராட்டத்திலேயே நான் சிக்கி இருந்தேன். எனக்கு ஆயுள் நீண்டதாக இருக்க முடியாது என்றே பொதுவாக கருதப்பட்டு வந்தது. இதற்கிடையில் எனது கண்களில் எரிச்சல் இருந்தது. எந்த அளவிற்கு எரிச்சல் இருந்தது என்றால், எனது ஒரு கண்ணின் பார்வை கிட்டத்தட்ட பறிபோய் விட்டது. அதாவது அதைக் கொண்டு பார்ப்பது தடைபட்டிருந்தது. எனவே அதிலிருந்து நான் மிகக் குறைவாகவே பார்த்து வந்தேன்.

இதனை அன்னார் (ரலி) கூறியவாறு தொடர்ந்து கூறுகின்றார்கள்: இப்போதும் கூட கண் பார்வை மிகக் குறைவாகவே உள்ளது.

பின்னர் நான் மேலும் பெரியவனானபோது தொடர்ந்து 6, 7 மாதங்கள் வரை எனக்கு தொடர் காய்ச்சல் இருந்து வந்தது. காசநோயாளி என்று தீர்மானித்தார்கள்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இந்த காரணங்களால் முறையாக கல்வி பயில முடியவில்லை. பள்ளிக்கூடம் செல்லவில்லை. லாஹூரைச் சார்ந்த மாஸ்டர் ஃபகீருல்லாஹ் சாஹிப் உள்ளார்கள். லாஹூரில்தான் அன்னார் (ரலி) இந்த சொற்பொழிவை ஆற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த ஆசிரியருக்கு முஸ்லிம் டவுனில் வீடு இருந்தது. அன்னார் எங்களுக்கு பள்ளிக்கூடத்தில் கணக்குப் பாடத்தை கற்பித்து வந்தார்கள். அன்னார் ஒரு முறை என்னைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், இவர் கல்வி கற்க வருவதில்லை. பெரும்பாலும் பள்ளிக் கூடத்திலிருந்து வெளியில் தான் இருக்கின்றார் என்று புகார் செய்தார்கள். ஒருவேளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கோபப்படுவார்கள் என்று நான் அஞ்சினேன். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், மாஸ்டர் சாஹிப்! இவரது உடல்நலம் பலவீனமாக உள்ளது. இவர் சில முறை பள்ளிக்கூடத்திற்கு சென்று விடுகின்றார். அதற்கு நாங்கள் நன்றி கூறுகின்றோம். ஏதாவது விஷயம் அவரது காதுகளில் விழுந்து விடுகின்றது. அவர் மீது அதிக அழுத்தம் கொடுக்காதீர்கள் என்று கூறினார்கள்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: இன்னும் கூறப்போனால் எனக்கு இதுவும் நினைவில் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள். நாம் அவருக்கு கணக்கை கற்றுக் கொடுத்து அவர் என்ன செய்யப் போகின்றார்? நாம் என்ன! அவரைக் கொண்டு வியாபாரமா செய்யப் போகின்றோம்?

ஆக அன்னார் (ரலி) அவர்களின் குழந்தைப் பருவத்தின் உடல் ஆரோக்கிய நிலை மற்றும் பள்ளிக்கூடத்திற்கு சென்று வந்த நிலை இவ்வாறே இருந்தது. அதுபோன்ற நிலையில் அன்னாரின் நீண்ட ஆயுளுக்கு

எவர் சான்றளிக்க முடியும்? ஆனால் அவர் நீண்ட ஆயுளை மட்டும் பெறவில்லை. மாறாக, வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார் என்ற முன்னறிவிப்பும் அதில் இடம் பெற்றிருந்தது. எனவே இதுபோன்ற நிலைகளில் அவருக்கு ஞானங்களும் கிடைக்கும் என்று எவரால் கூற முடியும்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை கற்றுக் கொண்டால் போதுமானதாகும்.

சுருக்கமாக, எனது உடல்நிலை எவ்வளவு பலவீனமாக இருந்தது என்றால் உலக கல்விகளைப் பயில்வதற்கு முற்றிலும் தகுதியற்றதாக இருந்தது. எனது கண் பார்வையும் பலவீனமானதாக இருந்தது. நான் துவக்க வகுப்பிலும், நடுநிலை வகுப்பிலும், என்ட்ரன்ஸ் தேர்விலும் தோல்வியுற்றேன். எந்தத் தேர்விலும் தேர்ச்சி பெறவில்லை. ஆனால் நான் பௌதீக மற்றும் ஆன்மீக ஞானங்களால் நிரப்பப்படுவேன் என்று இறைவன் என்னைப் பற்றி செய்தி வழங்கி இருந்தான். உலக கல்விகளில் எந்தவொரு கல்வியும் நான் பயின்றிருக்கவில்லை என்றபோதிலும் இறைவன் எனது எழுதுகோலால் எப்படிப்பட்ட மகத்துவமிக்க அறிவார்ந்த புத்தகங்களை எழுதச் செய்து விட்டான் என்றால் உலகம் அதனை படித்து விட்டு ஆச்சரியம் கொள்கின்றது. இதை விட அதிகமாக இஸ்லாமிய விவகாரங்கள் தொடர்பாக வேறு எதனையும் எழுதி விட முடியாது என்று ஒப்புக் கொள்வதற்கு அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி விட்டனர்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தற்போது தஃப்ஸீரே கபீர் என்ற பெயரில் நான் திருக்குர்ஆன் விளக்கவுரையின் ஒரு பகுதியை எழுதியுள்ளேன். அதைப் படித்து விட்டு பெரும் பெரும் எதிரிகளும் கூட இவ்விஷயத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். அதாவது இதுபோன்ற தஃப்ஸீரை இன்று வரை எவரும் எழுதவில்லை என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

பின்னர் நான் எப்போதும் லாஹூருக்கு வந்து செல்கின்றேன். இங்கு வசிப்பவர்கள் இதனை நன்கு அறிந்துள்ளனர். அதாவது கல்லூரி பேராசிரியர்கள் என்னை சந்திப்பதற்கு வருகின்றனர். மாணவர்கள் சந்திப்பதற்கு வருகின்றனர். மருத்துவர்கள் வருகின்றனர். மிகவும் பிரபலமான தலைவர்களும், வக்கீல்களும் சந்திப்பதற்கு வருகின்றனர். ஆயினும் இன்று வரை ஒரு முறை கூட இவ்வாறு நடைபெறாமல் இருந்ததில்லை. அதாவது எனக்கு முன்னால் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் மீது மாபெரும் பிரபலமான அறிஞர் ஒருவர் ஆட்சேபனை செய்து நான் அவருக்கு இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியிலேயே பதில் கொடுத்து அவரை அமைதிப்படுத்தாமல், வாயடைக்கச் செய்யாமல் இருந்ததே இல்லை. உண்மையில் இஸ்லாத்தின் போதனையின் மீது எந்தவொரு உண்மையான ஆட்சேபனையும் செய்ய முடியாது என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும். அது என்னுடன் இருந்துள்ளது. உலகக் கல்விகளை பொருத்தவரை எந்த கல்வியையும் நான் கற்றிருக்கவில்லை. ஆனால் இறைவன் எனக்கு தன் புறமிருந்து ஞானம் வழங்கியுள்ளான் என்பதையும் என்னால் மறுக்க முடியாது. மேலும் இறைவனே எனக்கு எல்லா வகையான பௌதீக, ஆன்மீக ஞானங்களிலிருந்தும் பங்கு வழங்கியுள்ளான்.

தொடர்ந்து அன்னார் (ரலி) அவர்கள் பௌதீக மற்றும் ஆன்மீக ஞானங்களால் நிறைக்கப்படுவது தொடர்பாக இவ்வாறு கூறினார்கள். அதாவது அல்லாஹ் எவ்வாறு ஞானங்களைக் கற்றுக் கொடுத்தான்? என்பது தொடர்பாக அன்னார் (ரலி) இவ்வாறு கூறுகின்றார்கள்:

அப்போது நான் சிறுவனாக இருந்தேன். நான் ஒரு கனவில் கண்டேன். ஒரு மணி அடிக்கின்றது. அதிலிருந்து டன் என்ற சப்தம் உருவானது. அது அதிகரித்து அதிகரித்து ஒரு படத்தின் ஃபிரேமின் வடிவில் வடிவம் பெற்று விட்டது. பின்னர் நான் பார்த்தேன். அந்த ஃபிரேமிலிருந்து ஒரு சித்திரம் வெளிப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு படம் அசையத் தொடங்கி விட்டது. பின்னர் திடீரென அதிலிருந்து ஒருவர் குதித்து எனக்கு முன்னால் வந்து விட்டார். நான் இறைவனின் வானவர் ஆவேன். நான் உமக்கு திருக்குர்ஆனின் தஃப்ஸீரை கற்றுக் கொடுப்பதற்காக வந்துள்ளேன் என்று அவர் கூறினார். கற்றுக் கொடுங்கள் என்று நான் கூறினேன். அப்போது அவர் சூரா ஃபாத்திஹாவின் தஃப்ஸீரை கற்றுக் கொடுக்க தொடங்கினார்.

அவர் கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொடுத்துக் கொண்டே சென்றார். எந்த அளவுக்கென்றால் إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ என்ற இடத்தை அடைந்தபோது, இன்று வரை உலகில் வந்த திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் அனைவரும் இந்த வசனம் வரை மட்டுமே தஃப்ஸீர் எழுதியுள்ளனர். ஆனால் நான் உமக்கு இதைத் தாண்டியும் தஃப்ஸீர் கற்றுத் தருகின்றேன் என்று அவர் கூறினார். எனவே அவர் சூரா ஃபாத்திஹா முழுவதற்குமான தஃப்ஸீரை எனக்கு கற்றுக் கொடுத்தார்.

இந்த கனவின் பொருள் உண்மையில் இதுவாகவே இருந்தது. அதாவது திருக்குர்ஆனைப் புரிகின்ற ஆற்றல் என்னுள் வைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த ஆற்றல் என்னுள் இந்த அளவிற்கு உள்ளது. நான் வாதம் செய்கின்றேன். நீங்கள் எந்த சபையில் விரும்பினாலும் நான் இந்த வாதத்தை செய்ய தயாராக இருக்கின்றேன். அதாவது சூரா ஃபாத்திஹாவிலிருந்தே அனைத்து இஸ்லாமிய ஞானங்களையும் என்னால் எடுத்துரைக்க முடியும்.

அன்னார் (ரலி) விளையாட்டு மைதானத்தில் இந்த சொற்பொழிவை ஆற்றிக் கொண்டிருந்தார்கள். உலகிற்கு கூறிக் கொண்டிருந்தார்கள். சவால் விடுத்துக் கொண்டிருந்தார்கள் ஆனால் அன்னாருக்குப் போட்டியாக எவரும் வரவில்லை.

தொடர்ந்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் சிறுவனாக பள்ளிக் கூடத்தில் பயின்று கொண்டிருந்தேன். அப்போது எங்களது பள்ளிக் கூடத்தின் கால்பந்து அணி அமிர்தசரஸில் கால்ஸா பள்ளியுடன் விளையாடுவதற்கு சென்றிருந்தது. போட்டி நடந்தது. எங்களது அணி வெற்றி பெற்று விட்டது. நமது ஜமாஅத்துடன் முஸ்லிம்கள் எதிர்ப்பு கொள்கின்றனர். ஆனால் அந்த இடத்தில் ஒரு வகையில் முஸ்லிம்களுக்கு கண்ணியம் கிடைத்திருந்தது. எனவே அமிர்தசரஸின் ஒரு தலைவர் நமது அணிக்கு தேநீர் வழங்கினார். நாங்கள் அங்கு சென்றபோது சொற்பொழிவாற்றும்படி நான் நிறுத்தப்பட்டேன். நான் அந்த சொற்பொழிவிற்காக எந்த தயாரிப்பும் செய்திருக்கவில்லை. நான் எழுந்து நின்றபோது உடனடியாக எனக்கு தஃப்ஸீர் கற்றுக் கொடுத்த அந்த வானவரின் கனவு நினைவிற்கு வந்து விட்டது. எனவே நான் முதலில் இறைவனிடத்தில் இவ்வாறு துஆ செய்தேன்.

இறைவா! உனது வானவர் எனக்கு கனவில் சூரா ஃபாத்திஹாவின் விளக்கத்தை கற்றுக் தந்துள்ளார். இந்த கனவு உன் புறமிருந்து வந்ததா? அல்லது எனது மனதின் ஏமாற்றுதலாக இருந்ததா? என்று இந்த விஷயத்தை இன்று நான் பரிசோதித்து பார்க்க விரும்புகின்றேன். இந்த கனவு ஒருவேளை உன் புறமிருந்து இருந்ததென்றால் சூரா ஃபாத்திஹாவின் ஒரு கருத்தை அதாவது இதற்கு முன்பு உலகின் எந்தவொரு விரிவுரையாளரும் எடுத்துரைக்காத ஒரு கருத்தை நான் எடுத்துரைக்க வேண்டும்.

எனவே இந்த துஆவிற்குப் பிறகு உடனடியாக இறைவன் எனது உள்ளத்தில் ஒரு கருத்தை ஏற்படுத்தினான். நான் கூறினேன்: பாருங்கள்! திருக்குர்ஆனில் அல்லாஹ் غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ என்ற துஆவை கற்றுத் தந்துள்ளான். முஸ்லிம்களே! நீங்கள் ஐவேளை தொழுகைகளிலும், தனிப்பட்ட தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் நாங்கள் கோபத்திற்கு ஆளானவர்களாவும், வழி தவறியவர்களாகவும் ஆகி விடக் கூடாது என்று துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹதீஸ்களில் கோபத்திற்கு ஆளானவர்கள் யார்? என்பதன் பொருளை சுயமே எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: கோபத்திற்கு ஆளானவர்கள் என்பதன் பொருள் யூதர்கள் ஆவர். வழிதவறியவர்கள் என்பதன் பொருள் கிறிஸ்தவர்கள் ஆவர். எனவே غَيْرِ الْمَغْضُوبِ என்பதன் பொருள் "இறைவா! நாங்கள் யூதர்களாக ஆகிவிடக் கூடாது" என்பதாகும்.

وَلَا الضَّالِّينَ என்பதன் பொருள் "இறைவா! நாங்கள் கிறிஸ்தவர்களாகவும் ஆகிவிடக் கூடாது" என்பதாகும்.

இந்த விஷயத்தின் மேற்படி விளக்கம் இதிலிருந்து தெரிய வருகின்றது. அதாவது இந்த சமுதாயத்தில் ஒரு மஸீஹ் வருவார். எவர் அவரை நிராகரிப்பாரோ அவர் நிச்சயம் யூதப் பண்புகளை பெற்றவராக ஆகி விடுவார் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மற்றொரு பக்கம் அன்னார் (ஸல்) அவர்கள் இதனையும் கூறினார்கள்: அதாவது கிறிஸ்துவத்தின் குழப்பம் ஒரு காலத்தில் குறிப்பாக அதிகரித்து விடும். மக்கள் ரொட்டிக்காகவும், வேலைக்காகவும் சமூக அந்தஸ்தை பெறுவதற்காகவும் கிறிஸ்துவத்தை மேற்கொண்டு விடுவார்கள். அல்லது ஏமாற்றுதலுக்கு ஆளாகி தமது மார்க்கத்தின் போதனையை புரியாமல் கிறிஸ்துவத்தை ஒப்புக்

கொண்டு விடுவார்கள். ஆனால் விநோதமான விஷயம் என்னவென்றால், சூரா ஃபாத்திஹா மக்காவில் இறங்கியது. அப்போது கிறிஸ்தவர்கள் அதிகமாக எதிர்க்கவில்லை. யூதர்களும் இஸ்லாத்தின் பெரிய எதிரிகளாக இருக்கவில்லை. அந்த நேரத்தில் மக்காவின் சிலை வணங்களின் புறமிருந்தே மிக அதிகமான எதிர்ப்பு இருந்து வந்தது. அந்த நேரத்தில் இறைவா! நாங்கள் சிலை வணங்கிகளாக ஆகிவிடக் கூடாது என்று துஆ கற்றுக் கொடுக்கப்படவில்லை. மாறாக, நாங்கள் யூதர்களாகவோ அல்லது கிறிஸ்தவர்களாகவோ ஆகி விடக்கூடாது என்ற இந்த துஆ கற்றுக் கொடுக்கப்பட்டது.

இதிலிருந்து தெளிவாக தெரிவது என்னவென்றால், இந்த சூராவின் மூலம் இறைவன் இந்த முன்னறிவிப்பை செய்திருக்கின்றான். அதாவது மக்கத்து சிலை வணங்கிகள் நிரந்தரமாக அழிக்கப்பட்டு விடுவார்கள். அவர்களின் பெயரும், அடையாளமும் எஞ்சியிருக்காது. எனவே அவர்கள் தொடர்பாக முஸ்லிம்களுக்கு ஏதாவது துஆ ஒன்றை கற்றுக் கொடுப்பதற்கான அவசியமே இருக்காது. ஆயினும் யூதர்களும், கிறிஸ்தவர்களும் எஞ்சியிருப்பர். அவர்களின் குழப்பங்களிலிருந்து தப்பிப்பதற்கு எப்போதும் துஆ செய்து கொண்டிருப்பது உங்களுக்கு அவசியமாக இருக்கும். எனது சொற்பொழிவு முடிவுற்ற பிறகு பெரும் பெரும் தலைவர்கள் என்னை சந்தித்தனர். நீங்கள் திருக்குர்ஆனை மிக அதிகமாக படித்துள்ளீர்கள். நாங்கள் முழு வாழ்நாளிலும் இந்த கருத்தை முதல் முறையாக கேட்டுள்ளோம் என்று அவர்கள் கூறத் தொடங்கினர்.

எனவே சம்பவம் இதுவே ஆகும். அனைத்து தஃப்ஸீர்களையும் பாருங்கள். எந்தவொரு திருக்குர்ஆன் விரிவுரையாளராவது இன்று வரை இந்த கருத்தை எடுத்துரைத்துள்ளாரா? என்பதை சீர்தூக்கிப் பாருங்கள். உள்ளபடியே அந்த நேரத்தில் எனது வயது சுமார் 20 ஆக இருந்தது. அல்லாஹ் அப்போது இந்த கருத்தை எனக்கு திறந்து கொடுத்தான்.

சுருக்கமாக, அல்லாஹ் தனது வானவரின் மூலமாக எனக்கு திருக்குர்ஆன் ஞானத்தை வழங்கியுள்ளான். என்னுள் அவன் எப்படிப்பட்ட ஆற்றலை ஏற்படுத்தியுள்ளான் என்றால் ஒருவருக்கு கருவூலத்தின் திறவுகோல் கிடைத்து விடுவதைப் போன்று எனக்கு திருக்குர்ஆன் ஞானங்களின் திறவுகோல் கிடைத்துள்ளது. எனக்கெதிராக என் முன்னால் போட்டியிடும் உலகின் எந்த அறிஞரும் இல்லை. மேலும் நான் திருக்குர்ஆன் சிறப்புகளை அவர் மீது வெளிப்படுத்தி விடுவேன்.

இது லாஹூர் நகரமாகும். லாஹூரில் அன்னார் (ரலி) சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். அங்கு பல்கலைக்கழகமும் உள்ளது. பல கல்லூரிகள் அங்கு திறந்துள்ளன. பெரும் பெரும் அறிவுகளின் நிபுணர்கள் அந்த இடத்தில் காணப்படுகின்றனர்.

நான் அவர்கள் அனைவரிடமும் கூறுகின்றேன். உலகத்தின் எந்தவொரு துறையிலும் நிபுணராக இருப்பவர் என் முன்னால் வரட்டும். உலகின் எந்தவொரு பேராசிரியரும் எனக்கு முன்னால் வரட்டும். உலகின் எந்தவொரு அறிவியல் அறிஞரும் என் முன்னால் வரட்டும். மேலும் தனது அறிவுகளால் திருக்குர்ஆன் மீது தாக்குதல் தொடுத்து பார்க்கட்டும். அல்லாஹ்வின் அருளால் அவருக்கு எப்படிப்பட்ட பதிலை என்னால் கொடுக்க முடியுமென்றால் அவரது ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு விட்டது என்பதை உலகத்திற்கு ஒப்புக் கொள்ள நேரிடும். மேலும் நான் வாதம் செய்கின்றேன். நான் இறைவனின் வேதத்திலிருந்தே அவருக்கு பதில் வழங்குவேன். திருக்குர்ஆன் வசனங்களைக் கொண்டே அவரது ஆட்சேபனைகளை ரத்து செய்து காட்டுவேன்.

(மே ஹி முஸ்லிஹ் மவ்வூது கி பேஷ்கோயி கா மிஸ்தாக் ஹூன், அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 213 – 217)

அன்னார் (ரலி) கூறியதுபோன்று இந்த சம்பவம் அன்னாருக்கு 20 வயது இருந்தபோது நிகழ்ந்த சம்பவம் ஆகும். அந்த நேரத்தில் அன்னார் (ரலி) அவர்களுக்கு இறைவன் மீது முழுமையான நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால் இந்த நம்பிக்கை எந்த வயதில் முழுமையடைந்தது? என்பது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இதிலிருந்து குழந்தைப் பருவம் முதலே அன்னார் (ரலி) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூது ஆக இருந்தார்கள் என்பதை அல்லாஹ் சுயமே உண்மைப்படுத்திக் கொண்டிருந்தான் என்று தெரிய வருகிறது.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 1900 ஆம் ஆண்டு இஸ்லாமிய கட்டளைகளின் பக்கம் எனது உள்ளத்திற்கு கவனமூட்டுவதற்கு காரணமாக அமைந்தது. அப்போது எனக்கு 11 வயது இருக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக ஒரு நபர் ஒரு வகையான வண்ண, அலங்காரமான துணியிலான மேலங்கி ஒன்றை கொண்டு வந்தார். நான் அன்னார் (அலை) அவர்களிடமிருந்து அந்த மேலங்கியை வாங்கிக் கொண்டேன். வேறு எந்தவொரு எண்ணத்தாலும் வாங்கவில்லை. மாறாக, அதன் நிறமும், அதன் வேலைப்பாடும் எனக்கு பிடித்திருந்தது. எனவே வாங்கினேன். என்னால் அதனை அணிய முடியாமல் இருந்தது. ஏனென்றால் அதன் விளிம்புகள் எனது கால்களுக்கு கீழே தொங்கிக் கொண்டிருந்தன. நான் 11 வயதை அடைந்திருந்தேன். 19 வது நூற்றாண்டில் நான் அடியெடுத்து வைத்தேன். அப்போது எனது உள்ளத்தில் இந்த எண்ணம் உருவானது. அதாவது நான் இறைவன் மீது ஏன் நம்பிக்கை கொண்டுள்ளேன். அவனது இருப்பிற்கு என்ன சான்று உள்ளது? என்று நான் நீண்ட இரவு வரை இது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன். இறுதியில் 10, 11 மணியளவில் எனது உள்ளம் ஆம்! ஓர் இறைவன் இருக்கின்றான் என்று முடிவெடுத்தது. அந்த நேரம் எனக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய நேரமாக இருந்தது.

எவ்வளவு மகிழ்ச்சிகுரிய நேரமாக இருந்ததென்றால் ஒரு குழந்தைக்கு அதன் தாய் கிடைத்து விட்டால் அதற்கு எந்த அளவிற்கு மகிழ்ச்சி ஏற்படுமோ அதேபோன்று எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அதாவது என்னைப் படைத்தவன் எனக்கு கிடைத்து விட்டான் என்ற மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது. 11 வயதில் இந்த எண்ணம் இருந்தது. ''செவி வழி ஈமான்'' அறிவார்ந்த ஈமானாக மாற்றமடைந்து விட்டது. அதாவது செவி வழி ஈமான் என்பது அறிவுப்பூர்வமான ஈமானால் மாற்றமடைந்தது.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் அந்த மகிழ்ச்சிப் பெருக்கில் அப்போது அல்லாஹ்விடம் துஆ செய்தேன். ஒரு நீண்ட காலமாக இந்த துஆவை செய்து கொண்டிருந்தேன். **இறைவா! உனது இருப்பைக் குறித்து ஒருபோதும் எனக்கு சந்தேகம் வரக் கூடாது.**

அப்போது எனக்கு 11 வயதாக இருந்தது. இன்று எனக்கு 35 வயதாகி விட்டது. ஆனால் இன்றும் இந்த துஆவை மதிப்புடன் பார்க்கின்றேன். இன்றும் நான் இவ்வாறே கூறுகின்றேன். இறைவா! உனது இருப்பைக் குறித்து எனக்கு எந்த சந்தேகமும் உருவாகக் கூடாது. ஆம்! அந்த நேரத்தில் நான் சிறுவனாக இருந்தேன். தற்போது எனக்கு அதிக அனுபவம் உள்ளது. நான் தற்போது இந்த அளவிற்கு மட்டும் அந்த துஆவை நீட்டித்துக் கொள்கின்றேன். அதாவது இறைவா! உனது இருப்பைக் குறித்து எனக்கு ஹக்குல் யகீன் (அனுபவ அறிவு) கிடைக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: விஷயம் எங்கிருந்து எங்கோ சென்று விட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேலங்கியை நான் வாங்கிக் கொண்டேன் என்பதை எழுதிக் கொண்டிருந்தேன். நான் மேலே குறிப்பிட்டிருக்கின்றேன். எனது உள்ளத்தின் எண்ணங்களில் அந்த அலைகள் உருவாகத் தொடங்கியபோது ஒரு நாள் முற்பகல் நேரத்திலோ அல்லது காலை நேரத்திலோ நான் வுளு செய்தேன். அந்த ஆடை அழகாக இருந்தது என்ற காரணத்திற்காக அல்லாமல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆடையாக இருந்ததாலும், அருளுக்குரியதாக இருந்ததாலும் நான் அதனை அணிந்து கொண்டேன். இறைவனின் அடியார் தூயவராக இருக்கின்றார் என்பதைப் பற்றி எனது உள்ளத்தில் உருவான முதல் உணர்வாக அது இருந்தது.

தொடர்ந்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் அப்போது கதவை அடைத்துக் கொண்டேன். மிகவும் அழுதழுது துஆ செய்தேன். நஃபில் தொழுதேன்.

(யாதே அய்யாம், அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 365, 366)

இதனை பிரிதோர் இடத்தில் இவ்வாறு அன்னார் (ரலி) அதன் விளக்கத்தை எடுத்துரைத்துள்ளார்கள். 11 வயதில் இறைவன் எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ளப்பட்டான்? என்பது பற்றி அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: எனக்கு 11 வயதாக இருந்தபோது அல்லாஹ் தனது அருளால் எனக்கு இந்த நற்பேறை வழங்கினான். அதாவது நான் எனது கொள்கையை ஈமானால் மாற்றிக் கொண்டேன். மக்ரிப்பிற்கு பிறகான நேரமாக இருந்தது. நான் எனது வீட்டில் நின்று கொண்டிருந்தேன். திடீரென எனக்கு இந்த எண்ணம் தோன்றியது. அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் எனது தந்தையாக இருப்பதால் நான் அஹ்மதியாக இருக்கின்றேனா? அல்லது அஹ்மதிய்யத்

உண்மையானது மற்றும் இந்த ஜமாஅத் இறைவனால் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதால் நான் அஹ்மதியாக இருக்கின்றேனா? என்ற எண்ணம் தோன்றியது.

இந்த எண்ணம் தோன்றிய பிறகு நான் இதனை சீர்தூக்கிப் பார்த்த பிறகே இங்கிருந்து வெளியேறுவேன் என்று நான் முடிவெடுத்தேன். அதாவது அஹ்மதிய்யத் உண்மை இல்லை என்று எனக்கு தெரிய வந்தால் நான் எனது அறையில் நுழைய மாட்டேன். மாறாக இங்கு வளாகத்திலிருந்தே வெளியேறி விடுவேன் என்றும் நான் முடிவெடுத்தேன். இது 11 வயது சிறுவனின் ஒரு சிந்தனையாக இருந்தது.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: எவ்வாறிருப்பினும் இவ்வாறு முடிவெடுத்து நான் சீர்தூக்கிப் பார்க்கத் தொடங்கினேன். இயற்கையாகவே அதன் விளைவாக சில சான்றுகள் எனக்கு முன்னால் வந்தன. அது குறித்து நான் ஆய்வு செய்தேன். சில முறை ஒரு சான்றை வைத்து நான் அதனை முறியடிப்பேன். பின்னர் மற்றொரு சான்றைக் கொண்டு அதை நான் நிராகரித்து விடுவேன். பின்னர் மூன்றாவது சான்று கொடுப்பேன். அதுவும் முறியடிக்கப்படும். எந்த அளவுக்கென்றால் அவ்வாறு நடந்து நடந்து இந்தக் கேள்வி எனக்கு முன்னால் வந்தது. அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதராக இருந்தார்களா? அல்லது எனது தாய், தந்தையின் கொள்கையாக அது இருப்பதால் நான் அன்னாரை உண்மையாளர் என ஒப்புக் கொள்கின்றேனா? அல்லது உண்மையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைத்தூதராக இருந்தார்கள் என்பது ஆதாரப்பூர்வமாக எனக்கு வெளிப்பட்டுள்ளதா? என்ற கேள்வியும் எழுந்தது.

இந்தக் கேள்வி எனக்கு முன்னால் வந்தபோது தற்போது இந்த விஷயத்திலும் நான் முடிவெடுத்தே தீருவேன் என்று எனது உள்ளம் கூறியது. அதன் பிறகு இயற்கையாகவே இறைவன் தொடர்பாகவும் எனது உள்ளத்தில் கேள்வி எழுந்தது. நான் மேலோட்டமாக கொள்கை அளவில் இறைவனை ஒப்புக் கொண்டிருக்கின்றேனா? அல்லது உள்ளபடியே உலகில் ஓர் இறைவன் இருக்கின்றான் என்ற உண்மைத்துவம் என் மீது வெளிப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுந்தது. இந்தக் கேள்விக்கு விடை தேட வேண்டும் என்று நான் கூறினேன். அப்போது அல்லாஹ்வைப் பற்றிய கேள்வி குறித்தும் நான் சீர்தூக்கிப் பார்க்கத் தொடங்கினேன். இறைவன் இருக்கின்றான் என்றால் முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையான தூதர் ஆவார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையான தூதர் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் உண்மையாளர் ஆவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையாளர் என்றால் பின்னர் அஹ்மதிய்யத்தும் நிச்சயமாக உண்மையாக இருக்கும். உலகிற்கு எந்தவொரு இறைவனும் இல்லையென்றால் பின்னர் இவர்களில் எவரும் உண்மையாளர் அல்ல என்று எனது உள்ளம் கூறியது.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இன்று நான் இந்த கேள்விகளுக்கு விடை தேடுவேன் என்று நான் முடிவெடுத்தேன். இறைவன் இல்லையென்றால் பின்னர் நான் எனது வீட்டில் இருக்க மாட்டேன். மாறாக, உடனடியாக வெளியேறி சென்று விடுவேன் என்று நான் முடிவெடுத்திருந்தேன்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இவ்வாறு முடிவெடுத்து நான் சிந்திக்கத் தொடங்கி விட்டேன். சிந்தித்துக் கொண்டே சென்றேன். எனது வயதின் அடிப்படையில் நான் சிறியவனாக இருந்தேன். இந்தக் கேள்விகளுக்கு என்னால் எந்த அறிவுப்பூர்வமான பதிலையும் வழங்க முடியவில்லை. ஆனாலும் நான் ஆராய்ந்து கொண்டே சென்றேன். எந்த அளவுக்கென்றால் எனது மூளை சோர்ந்து விட்டது. அப்போது நான் வானத்தை நோக்கி பார்த்தேன். அன்றைய தினம் மேகம் இருக்கவில்லை. தற்போது அல்லாஹ் அன்னாருக்கு இவ்வாறு கற்றுக் கொடுக்க விரும்பி இருந்தான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: வானம் மிகவும் தூய்மையாக இருக்கின்றது. நட்சத்திரங்கள் மிகவும் அழகுடன் விண்ணில் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு சோர்ந்த மூளைக்கு இதை விட மகிழ்ச்சியளிக்கக் கூடிய காட்சி வேறு என்னவாக இருக்க முடியும். நான் சோர்ந்திருந்தேன். வானத்தை பார்த்துக் கொண்டிருந்தேன். நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருந்தேன். எனவே அந்த நட்சத்திரங்களை பார்க்கத் தொடங்கி விட்டேன். எந்த அளவுக்கென்றால் நான் அந்த நட்சத்திரங்களில் மூழ்கி விட்டேன். சிறிது நேரத்திற்குப் பிறகு எனது மூளைக்கு புத்துணர்வு கிடைத்தது. அப்போது நான் எனது உள்ளத்தில் இவ்வாறு கூறினேன். நட்சத்திரங்கள் எவ்வளவு அழகாக உள்ளன! ஆனால் இந்த நட்சத்திரங்களுக்குப் பிறகு என்ன இருக்கும்? எனது மூளை அதற்கு இந்த பதிலை வழங்கியது. இதற்குப் பிறகு இன்னும் நட்சத்திரங்கள் இருக்கும். அதற்குப் பிறகு என்ன இருக்கும்? என்று நான் கேட்டேன். அதற்குப் பிறகு இன்னும் நட்சத்திரங்கள் இருக்கும் என்ற பதிலையே எனது உள்ளம் வழங்கியது.

பின்னர் அப்படியென்றால் அதன் பிறகு என்ன இருக்கும்? என்று எனது உள்ளம் கூறியது. எனது மூளை அதற்குப் பிறகு மேலும் நட்சத்திரங்கள் இருக்கும் என்ற பதிலையே வழங்கியது. பின்னர் நான் கூறினேன். சரி! அப்படியென்றால் அதற்குப் பிறகு என்ன இருக்கும்? இந்த கேள்விக்கும் எனது உள்ளமும், மூளையும் இதே பதிலைத் தான் வழங்கியது. அதாவது இன்னும் சில நட்சத்திரங்கள் இருக்கும். அது எப்படி இருக்கும்? ஒன்றிக்குப் பிறகு மற்றொன்று. மூன்றாவதற்குப் பிறகு நான்காவது நட்சத்திரங்கள் இருக்கும். இந்தத் தொடர் முற்றுப் பெறாதா? முற்றுப் பெறாதென்றால் அதன் பிறகு என்ன இருக்கும்?

இதே கேள்வியைப் பற்றி தான் பெரும்பாலான மக்கள் ஆச்சரியம் கொள்கின்றனர். அவர்கள் கூறுகின்றனர்: இறைவன் எல்லையற்றவன் ஆவான். அதன் பொருள் என்ன? என்று கேட்கின்றனர். மேலும் இறைவன் நிரந்தரமானவன் ஆவான் என்று நாம் கூறுவதன் பொருள் என்ன? இறுதியில் ஏதாவதொரு எல்லை இருக்க வேண்டுமே! என்று மக்கள் கேட்கின்றனர். எனது உள்ளத்தில் நட்சத்திரங்களைக் குறித்து இதே கேள்வி தான் எழுந்தது. ஒருவேளை இந்த தொடர் நிறைவு பெறாது என்றால் பின்னர் அது என்ன முடிவு பெறாத எல்லையற்ற ஒரு தொடரா? எனது மூளை இதுவரை வந்தடைந்தபோது இந்த இடத்தை நான் அடைந்தேன். அதாவது நான் கூறினேன். இறைவனின் இருப்பைப் பற்றி எல்லையற்றது அல்லது எல்லைக்குட்பட்டது என்ற கேள்விகள் முற்றிலும் வீணானவை ஆகும். நீங்கள் இறைவனை விட்டு விடுங்கள். இந்த நட்சத்திரங்களைப் பற்றி நீங்கள் என்ன கூறுவீர்கள்? அவை எனது கண்களுக்கு முன்னால் இருக்கின்றன. ஒருவேளை நாம் அதனை எல்லைக்குட்பட்டதாக கூறுகின்றோம் என்றால் எல்லைக்குட்பட்ட பொருட்கள் என்பது அது முடிந்து ஏனைய பொருட்கள் தொடங்கி விடுவது ஆகும்.

எனவே கேள்வி என்னவென்றால், அவை எல்லைக்குட்பட்டவை என்றால் அதற்குப் பிறகு என்ன இருக்கும்? ஒருவேளை அவை எல்லைக்குட்பட்டவை என்றால் அதன் பிறகு என்ன இருக்கும்? இவை எல்லைக்கு அப்பாற்பட்டவை என்று கூறினால் பின்னர் நட்சத்திரங்களின் எல்லையற்ற தன்மையை மனிதன் ஒப்புக் கொள்ள வேண்டும். எனவே இறைவன் எல்லையற்றவன் என்பதை எவ்வாறு ஒப்புக் கொள்ள முடியும்? அப்போது எனது உள்ளம் கூறியது. ஆம்! உண்மையிலேயே இறைவன் இருக்கின்றான். ஏனென்றால் அவன் இயற்கை சட்டங்களில் அதே ஆட்சேபனையை வைத்துள்ளான். அவனது இருப்பு தொடர்பாக எழுகின்ற அதே ஆட்சேபனைகளை வைத்துள்ளான். நீங்கள் என்னை எல்லையற்றவனாக கருதினால் நீங்கள் இந்த ஆட்சேபனைகளை செய்து கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கு தென்படுகின்ற அந்த பொருட்களைக் குறித்து உங்களிடம் என்ன பதில் உள்ளது? ஏனென்றால் நீங்கள் என் மீது செய்கின்ற அதே ஆட்சேபனைகள் அவற்றின் மீது ஏற்படுகின்றன. உங்களிடத்தில் அதற்கு எந்த பதிலும் இல்லை. இறைவன் எல்லையற்றவன் என்ற விஷயம் எங்களுக்கு புரியவில்லை என்று இறைவனைக் குறித்து சிரமம் இல்லாமல் நீங்கள் சிந்திக்காமல் கூறி விடுவீர்கள்.

மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) இவ்வாறு கூறினார்கள்: இறைவனின் இருப்பு எனக்கு நிரூபணமாகி விட்டபோது பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவமும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவமும் இந்த சான்றிலிருந்து எனக்கு தெளிவாகி விட்டது.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 19 பக்கம் 689 – 692)

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அன்னாரை ஞானத்தினால் நிரப்பினான் என்பதற்கு இதுவும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஒரு சான்றாகும். சாதாரண உலகக் கல்வியை பயிலக் கூடிய சிறுவனின் உள்ளத்தில் இவ்வாறு கேள்விகளை தோன்றச் செய்து பின்னர் சுயமே இறைவன் வழிகாட்டவும் செய்து விட்டான்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களைக் குறித்து என்ன எண்ணங்களைக் கொண்டிருந்தார்கள்? என்பதை அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்கள்: இதிலிருந்து அந்த சிறுவர் முஸ்லிஹ் மவ்வூது ஆக ஆகுவார் என்று அன்னார் (ரலி) அவர்கள் புரிந்திருந்தார்கள் என்பது தெரிய வருகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒன்றிரண்டு சம்பவங்களை குறிப்பிடுகின்றார்கள்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: சிறிது காலம் முன்பு முதல் முதலில் நான் ஒரு சில நண்பர்களுடன் இணைந்து தஷ்ஹீஸுல் அஸ்ஹான் என்ற பத்திரிகையை தொடங்கி இருந்தேன். இந்த பத்திரிகையை அறிமுகப்படுத்தி வைப்பபதற்காக நான் ஒரு கட்டுரையை எழுதினேன். அதில் அதன் நோக்கங்களை எடுத்துரைத்திருந்தேன். அந்த பத்திரிகை வெளியானபோது ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடத்தில் அதை வெகுவாக பாராட்டினார்கள். மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் இதை கட்டாயம் படிப்பதற்கு இந்த கட்டுரை தகுதியானது என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முபாரக் பள்ளிவாசலில் அந்த பத்திரிகையை கொண்டு வரச் செய்தார்கள். அநேகமாக மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் மூலமாக அந்த கட்டுரையை படிக்கச் செய்து செவியுற்றார்கள். மேலும் பாராட்டினார்கள். ஆனால் அதற்குப் பிறகு நான் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சந்தித்தேன். முதலில் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் பாராட்டி இருந்தார்கள். ஆனால் பின்நாட்களில் தனிப்பட்ட முறையில் இவ்வாறு கூறினார்கள்: அன்பரே! உமது கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. ஆனால் எனது உள்ளம் திருப்தியடையவில்லை.

அன்னார் (ரலி) கூறினார்கள்: நமது நாட்டில் ஒரு பிரபலமான பழமொழி உள்ளது. ஒட்டகம் 40 ரூபாய். ஒட்டகக்குட்டி 42 ரூபாய். அதாவது ஓர் ஒட்டகத்தின் விலை குறைவாகும். ஆனால் அதன் குட்டியின் விலை அந்த ஒட்டகத்தை விட அதிகமாகும் என்பது அந்த பழமொழி. நீங்கள் இந்த உதாரணத்தை முழுமை செய்யவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு அதனை புரியும் அளவிற்கு பஞ்சாபி மொழி தெரியவில்லை. அதன் பொருளை என்னால் புரிய முடியவில்லை. எனவே எனது முகத்தில் இருந்த ஆச்சரியத்தின் அடையாளத்தைக் கண்டு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) கூறினார்கள்: அநேகமாக நீங்கள் இதன் பொருளை புரியவில்லை என்று நினைக்கின்றேன்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: நமது பகுதியில் ஒரு பழமொழி உள்ளது. ஒரு நபர் ஒட்டகத்தை விற்பனை செய்து கொண்டிருந்தார். அத்துடன் ஒட்டகத்தின் குட்டியும் இருந்தது. அதனை அந்தப் பகுதியில் டூடா என்று கூறுகின்றார்கள். ஒருவர் அவரிடம் அதன் விலையை கேட்டபோது ஒட்டகத்தின் விலை 40 ரூபாய் தான். ஆனால் ஒட்டகக் குட்டியின் விலை 42 ரூபாய் என்று கூறினார். அதற்கு அந்த நபர் இது என்ன விஷயம்? என்று கேட்டார். அதற்கு அந்த வியாபாரி, டூடா ஒட்டகமும் ஆகும். குட்டியும் ஆகும் என்று கூறினார்.

இதேபோன்று உங்களுக்கு முன்னால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகமான பராஹீனே அஹ்மதிய்யா உள்ளது. அந்தப் புத்தகம் எழுதப்பட்டபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் வேறு எந்த இஸ்லாமிய நூலும் இருக்கவில்லை. ஆனால் உமக்கு முன்னால் இந்த நூல் இருந்தது. இதை விட சிறந்த ஒன்றை கொண்டு வருவீர்கள் என்ற நம்பிக்கை இருந்தது. இதிலிருந்து பயன் பெறுவீர்கள் என்றும் நம்பப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனால் அனுப்பப்பட்டவரை விட சிறந்த ஞானத்தை யாரால் கொண்டு வர முடியும். (கேள்வி இதுவல்ல). அவர்கள் மறைவான கருவூலங்களிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து வைத்து வருவார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பொருள் என்னவாக இருந்ததென்றால், பின்னால் வருகின்ற தலைமுறையினர் முந்தைய அடித்தளத்தை உயர்த்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அவர்களின் பணியாகும்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அன்னாரின் சூழலை அறிந்திருந்தார்கள். கல்வியையும் அறிந்திருந்தார்கள். அதன் பிறகும் அன்னாரைக் குறித்து இவ்வளவு உயர்ந்த எண்ணங்களை கொண்டிருந்தது இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது. அதாவது அன்னார் (ரலி) அவர்கள் நன்றாக இதனைப் புரிந்திருந்தார்கள். மேலும் இந்தப் பிள்ளை சிறந்த பிள்ளையாக திகழ்வார் என்பதையும் அறிந்திருந்தார்கள். மேலும் இவரால் உயர்தரமான கட்டுரையை எழுத முடியும். அந்த அளவிற்கு இந்த சிறுவனிடம் ஆற்றல் உள்ளது என்பதையும் அன்னார் (ரலி) அறிந்திருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது எப்படிப்பட்ட விஷயம் என்றால் இதனை எதிர்கால சந்ததிகள் மனதில் நிலைநிறுத்திக் கொண்டால் பின்னர் அவர்களும் பரக்கத்களையும், அருட்களையும் பெற முடியும். மேலும் சமுதாயத்தின் பரக்கத்கள் மற்றும் அருட்களுக்கு காரணியாக இருக்க முடியும். எனினும் தமது மூதாதையர்களை விட முந்திச் செல்வதற்கான முயற்சி நன்மையான விஷயங்களில் இருக்க வேண்டும். இதற்கு மாற்றமாக திருடனின் பிள்ளை தனது தந்தையை விட திருடனாக இருப்பதற்கு முயற்சி செய்தல் கூடாது. மாறாக பொருள் என்னவென்றால், தொழுகையாளியின் பிள்ளைகள் தந்தையை விட தொழுகையாளியாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 3 பக்கம் 484 – 485)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் குழந்தைப் பருவத்தின் உடல் ஆரோக்கியத்தைப் பற்றிய ஒரு சம்பவம் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டு விட்டது. அன்னாரின் உடல் ஆரோக்கியத்தின் நிலை மற்றும் அறிவார்ந்த நிலையைப் பற்றிய மற்றொரு சம்பவம் உள்ளது. உண்மையில் இதுவும் அன்னார் (ரலி) அவர்கள் மீது ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டிருந்த அன்பு மற்றும் பரிவிற்கான சம்பவமாகும். அன்னார் (அலை) அவர்கள் இந்தப் பிள்ளை வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருக்கின்றார் என்ற நம்பிக்கையில் நிலைத்திருந்தார்கள் என்பதையும் இந்த சம்பவம் நிரூபணம் செய்கின்றது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

எனது கல்வி தொடர்பாக மிக அதிகமாக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் என் மீது நன்மை செய்துள்ளார்கள். அன்னார் மருத்துவராகவும் இருந்தார்கள். என்னால் புத்தகத்தின் பக்கங்களை அதிக நேரம் பார்க்க முடியாது என்பதையும், எனது உடல் ஆரோக்கியம் அதற்கு தகுதியானது அல்ல என்பதையும் அன்னார் (ரலி) நன்கு அறிந்திருந்தார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் என்னை தன்னிடத்தில் அமர்த்திக் கொள்வார்கள். மேலும் அன்பரே! நான் படித்துக் கொண்டு செல்கின்றேன். நீங்கள் கேட்டுக் கொண்டே செல்லுங்கள் என்று கூறுவார்கள். இது அன்னார் (ரலி) அவர்களின் வழிமுறையாக இருந்தது.

பின்னர் அன்னார் (ரலி) தனது உடல் ஆரோக்கியத்தின் நிலையை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: குழந்தைப் பருவத்தில் எனது கண்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னரும் கண்களைக் குறித்து கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து 3, 4 ஆண்டுகள் வரை எனது கண்களில் எரிச்சல் இருந்தது. மேலும் இதன் காரணமாக கடுமையான வலியும், துன்பமும் எந்த அளவுக்கு ஏற்பட்டதென்றால் இவரின் பார்வை பறிபோய் விடும் என்று மருத்துவர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எனது உடல் ஆரோக்கியத்திற்காக சிறப்பான துஆக்களை செய்யத் தெடங்கி விட்டார்கள். அத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எனக்காக நோன்பு நோற்கவும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

தொடங்கினார்கள். அன்னார் (அலை) எத்தனை நோன்பு நோற்றார்கள் என்பது தற்போது எனக்கு நினைவில் இல்லை. எனினும் 3 அல்லது 7 நோன்பு நோற்றார்கள். கடைசி நோன்பை நோற்றபோது இஃப்தாரி செய்யத் தொடங்கினார்கள். மேலும் நோன்பை திறப்பதற்காக வாயில் ஒரு பொருளை போட்டபோது திடீரென நான் எனது கண்களை திறந்து விட்டேன். எனக்கு பார்வை தென்படத் தொடங்கி விட்டது என்று நான் குரல் கொடுத்தேன். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஃப்தாரி செய்வதற்கு தொடங்கி இருந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் எனது கண்களை திறந்தேன். மேலும் நான் எனது கண்களை திறந்து எனக்கு பார்வை தென்படத் தொடங்கி விட்டது என்று கூறினேன். ஆனால் அந்த நோயின் கடுமை மற்றும் தொடர் தாக்குதல்களின் விளைவு என்னவாக இருந்ததென்றால் எனது ஒரு கண்ணின் பார்வை பறிபோய் இருந்தது.

அதன் விளக்கத்தை அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: எனது இடது கண்ணில் பார்வை இல்லாமல் இருந்தது. என்னால் வழிப்பாதையை பார்க்க முடியும். ஆனால் அதைக் கொண்டு புத்தகங்களை படிக்க முடியாது. 2, 4 அடியில் ஒரு நபர் அமர்ந்திருக்கின்றார் என்றால் மேலும் ஒருவேளை அவர் நான் அறிந்திருந்த நபராக இருந்தால் அவரை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஆனால் நான் அறியாதவர் அமர்ந்திருக்கின்றார் என்றால் பின்னர் அவரது வடிவம் எனக்கு தென்படாது. வலது கண் மட்டுமே செயல்படுகின்றது. ஆயினும் அதிலும் குறைபாடு ஏற்பட்டு விட்டது. அதுவும் எவ்வளவு கடுமையான முறையில் ஏற்பட்டிருந்ததென்றால், அதனால் பல, பல இரவுகள் நான் விழித்திருந்தேன். இதுவே உடல் ஆரோக்கியத்தின் நிலையாகும்.

ஆனால் அன்னார் (ரலி) அவர்களின் அறிவார்ந்த பணிகளை பாருங்கள். இறைவனின் உதவிகள் அன்னார் (ரலி) அவர்களுக்கு எவ்வாறு கிடைத்தன? என்பதையும் பாருங்கள்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எனது ஆசிரியர்களிடம் இவ்வாறு கூறியிருந்தார்கள்: அதாவது கல்வி அவரது விருப்பத்திற்கேற்ப இருக்கும். அவர் எவ்வளவு படிக்க விரும்புகின்றாரோ அவ்வளவு படிக்கட்டும். அவர் படிக்கவில்லையென்றால் அவர் மீது அழுத்தம் கொடுக்கப்பட வேண்டாம். ஏனென்றால் படிப்பின் சுமையை சகித்துக் கொள்வதற்கு அவரது உடல் ஆரோக்கியம் தகுதி படைத்ததாக இல்லை.

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம் மீண்டும் மீண்டும் இதனையே கூறி வந்தார்கள். அதாவது நீங்கள் திருக்குர்ஆன் மொழியாக்கத்தையும், புகாரி ஹதீஸ் நூலையும் ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். அதாவது முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். அதுமட்டுமின்றி சில மருத்துவ நூல்களையும் படியுங்கள். ஏனென்றால் இது நமது குடும்பத்தின் கலையாகும் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சுருக்கமாக, இந்த அளவில் தான் எனக்கு கல்வி கிடைத்தது. உண்மையில் நான் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருந்தேன். ஏனென்றால் குழந்தைப் பருவத்தில் கண்களின் வேதனை மட்டுமின்றி எனக்கு கல்லீரல் பாதிப்பு நோயும் இருந்தது. எண்ணற்ற நோய்கள் இருந்தன. ஆறு ஆறு மாதங்கள் வரை சிறு பயிறு தண்ணீர் அல்லது கீரை தண்ணீர் எனக்கு கொடுக்கப்பட்டு வந்தது. மேலும் அத்துடன் காசநோயும் அதிகரித்திருந்தது.

அத்துடன் எனக்கு மண்ணீரல் வீக்கமும் இருந்தது. மேலும் ரெட் ஐயோடைட் ஆஃப் மெர்குரி மூலம் மண்ணீரல் இருக்கும் பகுதியின் மேல் எனக்கு மஸாஜ் செய்யப்பட்டது. இதேபோன்று தொண்டையிலும் எனக்கு மசாஜ் செய்யப்பட்டது. ஏனென்றால் எனக்கு தைராய்டு சுரப்பியின் வீக்கமும் இருந்தது. சுருக்கமாக, கண்களில் குறைபாடு, கல்லீரல் பாதிப்பு, காசநோய் புகார்கள் பின்னர் அத்துடன் காய்ச்சல் தொடங்கி விடுவது, மேலும் ஆறு, ஆறு மாதம் வரை தொடர்ந்து காய்ச்சால் குறையாமல் இருப்பது போன்ற பிரச்சனைகள் இருந்தன. எனவே எனது கல்வியைக் குறித்து இவர் எவ்வளவு படிக்க விரும்புகின்றாரோ அவ்வளவு படித்துக் கொள்ளட்டும். அவரது விருப்பத்திற்கு எதிராக அழுத்தம் கொடுக்க வேண்டாம் என்று சான்றோர்கள் முடிவு செய்திருந்தார்கள். இந்த அனைத்து நிலைமைகளையும் கொண்டு எனது கல்வித் தகுதியின் நிலை என்னவாக இருக்கும் என்பதை எல்லாராலும் கணித்துக் கொள்ள முடியும்.

ஒரு முறை எங்களது தாய்வழிப் பாட்டனார் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்கள் எனது உருதுப் புலமையை சோதித்துப் பார்த்தார்கள். தற்போதும் கூட எனது எழுத்து நன்றாக இல்லை. அந்த காலத்தில் எனது எழுத்து எந்த அளவிற்கு மோசமானதாக இருந்ததென்றால் நான் என்ன எழுதியுள்ளேன் என்பதை படிக்க முடியாமல் இருந்தது. நான் என்ன எழுதியுள்ளேன் என்பதை அறிவதற்கு அன்னார் மிகவும் முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்களால் எதனையும் படிக்க முடியவில்லை. மீர் சாஹிப் அவர்களின் இயல்பில் மிகவும் கடுமை இருந்தது. கோபத்துடன், உடனடியாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சென்றார்கள். நானும் தற்செயலாக அந்த நேரத்தில் வீட்டிலேயே இருந்தேன். நாங்கள் ஏற்கனவே அன்னாரின் இயல்பினால் அஞ்சிக் கொண்டிருந்தோம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் தாய்வழிப் பாட்டனாராக இருந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் புகாரை எடுத்துக் கொண்டு சென்றார்கள். எனவே என்ன நடக்குமோ என்று நாங்கள் மேலும் அஞ்சினோம். எப்படி இருப்பினும் மீர் சாஹிப் அவர்கள் சென்றார்கள். மேலும் மஹ்மூதின் கல்வியின் பக்கம் தங்களுக்கு சற்றும் கவலை இல்லை. நான் அவருக்கு உருது மொழி தேர்வை நடத்தினேன். தாங்கள் சற்று இந்த பேப்பரை பாருங்கள். இவரது எழுத்து எந்த அளவிற்கு மோசமாக உள்ளதென்றால், எவராலும் இதனை படிக்க முடியவில்லை என்று ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் கூறினார்கள். பின்னர் அதே உத்வேகத்தின் நிலையில் அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறினார்கள்: தங்களுக்கு முற்றிலும் கவலையே இல்லை. பிள்ளையின் வயது வீணாகிக் கொண்டிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீர் சாஹிப் அவர்களை இந்த உத்வேகத்தின் நிலையில் கண்டபோது இவ்வாறு கூறினார்கள்: மவ்லவி சாஹிபை அழையுங்கள் என்று கூறினார்கள். அன்னார் (அலை) அவர்களுக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் அன்னார் (அலை) எப்போதும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (அலை) அவர்களை அழைத்து வந்தார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு என் மீது மிகவும் அன்பு இருந்தது. அன்னார் (ரலி) வருகை தந்தார்கள். வழக்கம் போல் தலையை தாழ்த்திக் கொண்டு ஒரு பக்கம் நின்று கொண்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மவ்லவி சாஹிப் அவர்களே! நான் தங்களை ஏன் அழைத்துள்ளேன் என்றால் மஹ்மூது எழுதிய விஷயத்தை படிக்க முடியவில்லை என்று மீர் சாஹிப் கூறுகின்றார்கள். இதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று எனது உள்ளம் விரும்புகின்றது.

இவ்வாறு கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பேனாவை எடுத்தார்கள். மேலும் இரண்டு, மூன்று வாக்கியங்களை எழுதி என்னிடத்தில் கொடுத்தார்கள். இதனை பார்த்து எழுதுமாறு கூறினார்கள். ஆக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எனக்கு இவ்வாறு தேர்வு நடத்தினார்கள். நான் மிகவும் எச்சரிக்கையுடன், மிகவும் சிந்தித்து, புரிந்து அதனை பார்த்து எழுதி விட்டேன். முதல் விஷயம் என்னவென்றால், அந்த வாக்கியம் ஒன்றும் பெரிய வாக்கியமாக இருக்கவில்லை. இரண்டாவதாக, நான் அதைப் பார்த்து தான் எழுத வேண்டியதிருந்தது. பார்த்து எழுதுவது மிகவும் எளிதான ஒன்றாகும். ஏனென்றால் அசல் விஷயம் முன்னால் இருக்கின்றது. எனவே நான் மெது மெதுவாக அதைப் பார்த்து எழுதி விட்டேன். அலிஃப் மற்றும் பா போன்றவற்றை எச்சரிக்கையுடன் எழுதினேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனைப்ப பார்த்தபோது மீர் சாஹிப் அவர்களின் கூற்றினால் எனக்கு மிகவும் கவலை ஏற்பட்டிருந்தது. ஆனால் இவரின் கையெழுத்து எனது கையெழுத்துடன் ஒப்புமை கொண்டுள்ளது

என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முதலாவது கலீஃபா அவர்கள் ஏற்கனவே எனக்கு ஆதரவாக இருந்தார்கள். எனக்கு ஆதரவாக அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அன்னார் கூறினார்கள்: ஹுஸூர்! மீர் சாஹிப் அவர்களுக்கு தேவையின்றி உத்வேகம் ஏற்பட்டு விட்டது. உள்ளபடியே இவரின் கையெழுத்து மிகவும் நன்றாக உள்ளது.

ஆக எனது நிலைமை இவ்வாறே இருந்தது.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இந்த நிலைமைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள். என்னால் வெளிப்படையான அறிவை எவ்வாறு பெற்றுக் கொண்டிருக்க முடியும்?

தனது கல்வித் தகுதியைக் குறித்து ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் என்னிடம் கூறி வந்தார்கள்: அன்பரே! நீங்கள் சுயமே படிக்கும் அளவிற்கு உங்களது உடல்நலம் இல்லை. எனக்கு அருகில் வந்து அமர்ந்து கொள்ளுங்கள். நான் படித்துக் கொண்டு செல்வேன். நீங்கள் கேட்டுக் கொண்டு செல்லுங்கள்.

எனவே அன்னார் (ரலி) முதலில் எனக்கு வேகமாக திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் புகாரியை கற்றுக் கொடுத்தார்கள். மெது மெதுவாக அன்னார் எனக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்கவில்லை. மாறாக, அன்னார் (ரலி) அவர்களின் வழிமுறை என்னவாக இருந்ததென்றால், அன்னார் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டு செல்வார்கள். அத்துடன் அதன் மொழியாக்கத்தையும் செய்து கொண்டு செல்வார்கள். ஏதாவது முக்கியமான விஷயம் இருப்பதாக கருதினால் அதனை கூறி விடுவார்கள். இல்லையென்றால் வேக வேகமாக படித்துக் கொண்டு செல்வார்கள். அன்னார் (ரலி) அவர்கள் மூன்று மாதத்தில் எனக்கு முழு திருக்குர்ஆனையும் கற்றுக் கொடுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு சிறிது இடைவெளியும் ஏற்படத் தொடங்கியது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னார் (ரலி) அவர்கள் மீண்டும் என்னிடத்தில், அன்பரே! என்னிடமிருந்து புகாரியை முழுமையாக கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி இருந்தார்கள்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: உண்மையில் நான் அன்னார் (ரலி) அவர்களிடம் கூறி இருந்தேன். அதாவது முதல் கலீஃபா அவர்களிடம் கூறி இருந்தேன். மவ்லவி சாஹிப் அவர்களிடமிருந்து திருக்குர்ஆனையும், புகாரியையும் கற்றுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம் கூறி வந்துள்ளார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையிலேயே நான் அன்னார் (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆன் மற்றும் புகாரியை படிக்கத் தொடங்கி இருந்தேன். ஒரு வகையில் சிறிது இடைவெளியும் ஏற்பட்டிருந்தது. இதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப மருத்துவ நூலையும் அன்னார் (ரலி) அவர்களிடமிருந்து படிக்கத் தொடங்கி இருந்தேன்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) கூறினார்கள்: சுருக்கமாக அன்னார் (ரலி) அவர்களிடமிருந்து மருத்துவமும் படித்தேன். திருக்குர்ஆன் தஃப்ஸீரையும் படித்தேன். அன்னார் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் விளக்கவுரையை இரண்டு மாதங்களிலேயே படித்து முடித்திருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் என்னை தமக்கு அருகில் அமர்த்திக் கொள்வார்கள். சில சமயம் பாதி, சில சமயம் முழு பாராவையும் மொழியாக்கத்துடன் படித்துக் காட்டி விடுவார்கள். ஏதாவது வசனத்தின் தஃப்ஸீரை செய்து கொடுப்பார்கள். இதேபோன்று அன்னார் (ரலி) அவர்கள் 2, 3 மாதங்களில் புகாரியை எனக்கு கற்றுக் கொடுத்து முடித்து விட்டார்கள். ஒரு முறை ரமலான் மாதத்தில் அன்னார் (ரலி) அவர்கள் முழு திருக்குர்ஆன் தர்ஸையும் வழங்கினார்கள். அப்போது நானும் கலந்து கொண்டேன். சில அரபி நூல்களையும் அன்னாரிடமிருந்து படிப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. சுருக்கமாக இதுவே எனது அறிவாற்றலின் நிலையாக இருந்தது.

(அல்–மவ்வூது, அன்வாருல் உலூம் தொகுதி 17 பக்கம் 532 – 537)

முதல் சொற்பொழிவு குறித்து ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியது தொடர்பாக அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது ஓர் ஆசிரியர் இருந்தார். நான் அவரை கண்டுள்ளேன். அதாவது நான் தர்ஸ் கொடுக்கும்போது அவர் முறையாக எனது தர்ஸில் பங்கு பெற்று வந்தார். ஆனால் அவருக்கு போட்டியாக எனது இன்னொரு ஆசிரியரும் இருந்தார். அவர் தர்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கும்போது முதல் நபர் பள்ளிவாசலுக்கு வந்து அவர் தர்ஸ் கொடுப்பதை பார்த்தால் அவர் சென்று விடுவார். இவரது விஷயங்களை கேட்பதற்கு என்ன இருக்கின்றது? இவை கேட்ட விஷயங்கள் தான் என்று அவர் கூறுவார். ஆனால் எனது தர்ஸில் நான் அவரது மாணவனாக இருந்தபோதிலும் என் மீது நல்லெண்ணம் கொண்டிருந்ததன் காரணத்தால் கண்டிப்பாக தர்ஸில் கலந்து கொள்வார். மேலும் நான் இவரது தர்ஸில் ஏன் கலந்து கொள்கின்றேன் என்றால் இவர் மூலமாக திருக்குர்ஆனின் சில புதிய பொருள்கள் எனக்கு தெரிய வருகின்றன என்று கூறி வந்தார். இது அல்லாஹ்வின் அருளாகும். சில நபர்கள் மீது சிறிய வயதிலேயே அதுபோன்ற ஞானங்கள் திறந்து கொடுக்கப்படுகின்றன. அந்த ஞானங்களைப் பற்றி மற்றவர்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. உண்மையில் விஷயம் என்னவாக இருந்ததென்றால் அல்லாஹ் அன்னார் (ரலி) அவர்களை முஸ்லிஹ் மவ்வூதாக ஆக்க இருந்தான். எனவே சுயமே கல்வியும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: அதே பள்ளிவாசலில் நடந்த சம்பவம் ஆகும். அநேகமாக மஸ்ஜிது அக்ஸாவின் விஷயமாகும். 1907 ஆம் ஆண்டில் முதல் முதலில் நான் பொது மக்களுக்கு முன்னால் சொற்பொழிவு நிகழ்த்தினேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையில் அன்னாரின் மரணத்திற்கு ஓர் ஆண்டிற்கு முன்பு நிகழ்ந்த சம்பவமாகும். ஜல்ஸாவிற்கான சந்தர்ப்பமாக இருந்தது. ஏராளமான மக்கள் ஒன்றுகூடி இருந்தனர். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். நான் சூரா லுக்மானின் இரண்டாவது ருகூவை ஓதினேன். பின்னர் அதன் தஃப்ஸீரையும் எடுத்துரைத்தேன். எனது நிலை அப்போது எவ்வாறு இருந்ததென்றால் நான் எழுந்து நின்றேன். அதற்கு முன்னர் நான் பொது மக்களுக்கு முன்னால் ஒருபோதும் சொற்பொழிவு ஆற்றி இருக்கவில்லை. மேலும் எனது வயதும் அப்போது 18 வயதாகவே இருந்தது. மேலும் அந்த நேரத்தில் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். அஞ்சுமனின் உறுப்பினர்களும் இருந்தார்கள். ஏராளமான நண்பர்களும் வந்திருந்தார்கள். எனவே எனது கண்களுக்கு முன்னால் இருள் சூழ்ந்து விட்டது. அந்த நேரத்தில் எனக்கு எதுவும் தெரியவில்லை. எனக்கு முன்னால் யார் அமர்ந்திருக்கின்றார்? யார் இல்லை? என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை. அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் சொற்பொழிவு தொடர்ந்தது. நான் சொற்பொழிவை முடித்து விட்டு அமர்ந்தபோது எனக்கு நினைவு உள்ளது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுந்து நின்று கூறினார்கள்:

அன்பரே! நான் உங்களுக்கு வாழ்த்துக்கள் கூறுகின்றேன். நீங்கள் மிக சிறப்பான சொற்பொழிவு ஆற்றினீர்கள். நான் உங்களை மகிழ்ச்சியூட்டுவதற்காக கூறவில்லை. உண்மையிலேயே உங்களது சொற்பொழிவு நன்றாக இருந்தது என்று நான் உங்களுக்கு நம்பிக்கையூட்டுகின்றேன்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 22 பக்கம் 472, 473)

எனவே அல்லாஹ் அன்னாரை ஞானத்தால் நிரப்பி விட்டான். எந்த அளவுக்கென்றால் அன்னாரின் 52 ஆண்டு கால வாழ்க்கை இதற்கு சாட்சியாக உள்ளது. மார்க்க கட்டுரை தொடர்பான கேள்வியாக இருக்கட்டும். அல்லது உலக கட்டுரையாக இருக்கட்டும். ஒரு தலைப்பில் எழுதும்படியும், பேசும்படியும் அன்னாரிடம் கூறப்பட்டபோதெல்லாம் அன்னார் அறிவு மற்றும் ஞானத்தின் நதியை பெருக்கெடுக்கச் செய்தார்கள். எண்ணற்ற சந்தர்ப்பங்களில் அன்னாரின் சொற்பொழிவை அந்நியர்களும் மிகவும் பாராட்டியுள்ளனர். இதுவும் பதிவுகளில் உள்ளது. வெளிப்படையாக பொது இடத்தில் பொது மக்களுக்கு முன்னால் அன்னாரை பாராட்டினர். பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன. இதிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு மிகவும் பொலிவுடன் முழுமையடைந்துள்ளது என்பது வெளிப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் அன்னாரின் புத்தகளுங்களும், குத்பாக்களும் ஒரு விலை மதிப்பற்ற கருவூலமாக உள்ளன. ஆயிரக்கணக்கான பக்கங்கள் அநேகமாக லட்சம் பக்கம் கூட இருக்கும். தற்போது ஆங்கிலத்திலும், ஏனைய மொழிகளிலும் அவை மொழியாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அதிலிருந்து பயன் பெறுவது நமது பணியும் ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தன்னை முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பிற்கு பொருத்தமானவராக கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளாலும், அவனது கருணையாலும் எந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு ஒரு நீண்ட காலமாக காத்திருக்கப்பட்டு வந்ததோ அல்லாஹ் அது தொடர்பாக தனது இல்ஹாம் மற்றும் அறிவிப்பின் மூலமாக அந்த முன்னறிவிப்பு எனது இருப்பின் மூலமாக முழுமையடைந்து விட்டது என்று என்னிடம் கூறியுள்ளான்.

தற்போது இஸ்லாத்தின் எதிரிகள் மீது இறைவன் சான்றுகளை முழுமை செய்துள்ளான். மேலும் இஸ்லாம் இறைவனின் உண்மையான மார்க்கம் என்பதையும், முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதர் என்பதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனின் உண்மையான அடியார் ஆவார் என்பதையும் அவர்கள் மீது வெளிப்படுத்தி விட்டான். இஸ்லாத்தை பொய் என்று கூறுபவர்கள் பொய்யர்கள் ஆவர். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களை பொய்யர் என கூறுபவர்கள் பொய்யர்கள் ஆவர். இறைவன் இந்த மகத்துவமிக்க முன்னறிவிப்பின் மூலமாக இஸ்லாம் மற்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஓர் உயிருள்ள சான்றை மக்களுக்கு முன்னால் வைத்து விட்டான்.

எந்த நபருக்கு இதற்கு ஆற்றல் இருந்தது? அதாவது 1886–ல் அதாவது இன்றிலிருந்து 52 ஆண்டுகளுக்கு முன்னர் அன்னார் (அலை) அவர்கள் இந்த விஷயத்தை எடுத்துக் கூறி இருந்தார்கள். அப்போதிருந்து இதுவரை 52 ஆண்டுகள் ஆகி விட்டன. தமக்கு 9 ஆண்டுகளுக்குள் ஒரு மகன் பிறப்பான் என்று சுயமாக தன் புறமிருந்து அன்னார் செய்தி கொடுக்க முடியுமா? மேலும் அவர் வேகமாக வளர்வார். உலகின் எல்லைகள் வரை பிரபல்யம் அடைந்து விடுவார். அவர் இஸ்லாம் மற்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பெயரை உலகில் பரப்புவார். அவர் பௌதீக மற்றும் ஆன்மீக ஞானத்தால் நிரப்பப்படுவார். மேலும் அவர் இறை கம்பீரத்தின் வெளிப்பாட்டிற்கு காரணியாக இருப்பார். இறைவனின் வல்லமை, அவனது நெருக்கம் மற்றும் அவனது கருணையின் ஓர் உயிருள்ள அடையாளமாக அவர் இருப்பார் என்று இந்த செய்திகளை உலகின் ஒரு மனிதன் தன் புறமிருந்து கொடுக்க முடியாது. இறைவன் இந்த செய்தியை கொடுத்திருந்தான். பின்னர் அதே இறைவன் தான் இந்த செய்தியை முழுமை செய்தான். மேலும் எந்த நபரைக் குறித்து மருத்துவருக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்ததோ அவர் மூலமாக இறைவன் அந்த செய்தியை முழுமை செய்தான். அதாவது இந்த நபர் உயிருடன் இருப்பார். நீண்ட ஆயுளைப் பெறுவார் என்று எவரைக் குறித்து மருத்துவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்ததோ அந்த மனிதர் மூலமாக இறைவன் அந்த செய்தியை முழுமை செய்தான்.

பின்னர் தனது உடல் ஆரோக்கியத்தைப் பற்றி அன்னார் (ரலி) கூறினார்கள்: எனது உடல் ஆரோக்கியம் குழந்தைப் பருவத்தில் எவ்வளவு மோசமாக இருந்ததென்றால் ஒரு சந்தர்ப்பத்தில் டாக்டர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் என்னைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், இவருக்கு காசநோய் ஏற்பட்டு விட்டது. இவரை ஏதாவது மலை பிரதேசத்திற்கு அனுப்பி வைத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் என்னை ஷிம்லாவிற்கு அனுப்பி வைத்து விட்டார்கள். ஆனால் அங்கு சென்று நான் மிகவும் சோர்ந்து விட்டேன். அதன் காரணமாக அங்கிருந்து விரைவாக திரும்பி விட்டேன்.

சுருக்கமாக, எந்த நபரின் உடல் ஆரோக்கியம் ஒரு நாள் கூட நல்லதாக இருக்கவில்லையோ அந்த மனிதரை இறைவன் உயிருடன் வைத்தான். அவர் மூலமாக தனது முன்னறிவிப்புகளை முழுமை செய்ய வேண்டும் என்பதற்காகவும், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவத்தின் சான்றுகளை மக்களுக்கு முன்னால் வைப்பதற்கும் இறைவன் அவரை உயிருடன் வைத்தான்.

பின்னர் நான் எப்படிப்பட்ட நபராக இருந்தேன் என்றால் எனக்கு வெளிப்படையான எந்தவொரு கல்வியும் கிடைத்திருக்கவில்லை. ஆனால் இறைவன் தனது அருளால் வானவர்களை எனது கல்விக்காக அனுப்பினான். மேலும் எந்தவொரு மனிதனின் கற்பனையிலும் வர முடியாத திருக்குர்ஆனின் ஞானங்களை எனக்கு அறிவித்துக் கொடுத்தான். மேலும் இறைவன் எப்படிப்பட்ட ஞானத்தை வழங்கினான்! மேலும் எப்படிப்பட்ட ஆன்மீக ஊற்றை எனது நெஞ்சத்தில் ஓடச் செய்தான் என்றால் அவை கற்பனையானதாக இருக்கவில்லை. மாறாக, அவை உறுதியானதாகவும், முழுமையானதாகவும் உள்ளது.

நான் முழு உலகிற்கும் சவால் விட்டுக் கூறுகின்றேன். இறைவன் புறமிருந்து தனக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கப்பட்டதாக வாதம் செய்கின்ற ஒரு நபர் உலகின் திரையில் இருக்கின்றார் என்றால் நான் எப்போதும் அவருடன் போட்டியிடுவதற்கு தயாராக உள்ளேன். ஆனால் என்னுடன் போட்டியிடுவதற்கு எவருமே முன் வரவில்லை. ஆனால் நான் நன்கு அறிகின்றேன். இன்று உலகின் திரையில் என்னைத்தவிர வேறு எந்த நபரும் இல்லை. இறைவன் புறமிருந்து திருக்குர்ஆனின் ஞானம் வழங்கப்பட்ட எந்த நபரும் என்னைத்தவிர உலகில் வேறு எவரும் இல்லை. இறைவன் எனக்கு திருக்குர்ஆன் ஞானத்தை வழங்கியுள்ளான். இந்த காலத்தில் அவன் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்கு உலகின் ஆசிரியராக என்னை ஆக்கியுள்ளான். நான் முஹம்மது (ஸல்) மற்றும் திருக்குர்ஆனின் பெயரை உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பதற்காகவும், இஸ்லாத்திற்கு எதிரில் உலகிலுள்ள அனைத்து பொய்யான மார்க்கங்களை நிரந்தரமாக தோற்கடிப்பதற்காகவும் இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.

அன்னார் (ரலி) அவர்கள் இந்த பணியை செய்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் காலத்தில் எண்ணற்ற திருக்குர்ஆன் மொழியாக்கங்கள் வெளியாகின. எண்ணற்ற என்று இல்லையென்றாலும் நிறைய எண்ணிக்கையில் வெளியாகி உள்ளன. பின்னர் இன்று வரை அதே பணி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. அன்னார் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் 17, 18 மொழிகளில் மொழியாக்கங்கள் செய்யப்பட்டிருந்தன. அதேபோன்று இஸ்லாத்தின் பிரச்சாரம் உலகின் எல்லைகள் வரை அன்னார் (ரலி) அவர்களின் காலத்திலேயே சென்றடைந்தது.

அன்னார் (ரலி) கூறினார்கள்: உலகம் முழுமையாக முயற்சி செய்யட்டும். தனது அனைத்து ஆற்றல்களையும், கூட்டங்களையும் ஒன்று கூட்டிக் கொள்ளட்டும். கிறிஸ்தவ அரசர்களும் அவர்களின் அரசாங்கங்களும் ஒன்றுகூடி கொள்ளட்டும். ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஒன்றுகூடி கொள்ளட்டும். உலகின் அனைத்து பெரும் பெரும் செல்வந்தர்களும், ஆற்றல் வாய்ந்த சமுதாயங்களும் ஒன்றிணைந்து கொள்ளட்டும். அவர்கள் இந்த நோக்கத்தில் என்னை தோல்வியுறச் செய்வதற்காக ஒன்றிணைந்து கொண்டாலும் பரவாயில்லை. அதன் பிறகும் நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். அவர்கள் எனக்கெதிரில் தோல்வியுறுவார்கள். இறைவன் எனது துஆக்கள் மற்றும் திட்டங்களுக்கு முன்னால் அவர்களின் அனைத்து திட்டங்களையும், சதிகளையும், ஏமாற்று வேலைகளையும் அழித்து விடுவான். இறைவன் என் மூலமாக அல்லது எனது சீடர்கள் மற்றும் தொண்டர்கள் மூலமாக இந்த முன்னறிவிப்பின் உண்மையை நிரூபணம் செய்வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காரணமாகவும், இஸ்லாத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுவான். இஸ்லாம் மீண்டும் தனது முழுமையான அழகுடன் உலகில் நிலைபெற்று விடாத வரை அவன் உலகை விட்டு விட மாட்டான். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களை மீண்டும் உலகின் உயிருள்ள நபி என்று உலகத்தை ஒப்புக் கொள்ளச் செய்யாத வரை இறைவன் உலகை விட்டு விட மாட்டான்.

(அல்–மவ்வூது தொகுதி 17 பக்கம் 613, 614)

எனவே இந்த முன்னறிவிப்பு முழுமையடைந்து விட்டது. அன்னார் (ரலி) அவர்கள் தனது காலக்கட்டத்தை கடந்தார்கள். ஆனால் முன்னறிவிப்பிலுள்ள சொற்கள் இன்று வரை நிலைபெற்றுள்ளன. இன்ஷா அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கம் முழுமை பெறும் வரை, இஸ்லாத்தின் கொடி முழு உலகிலும் உயரமாக பறக்கும் வரை இவை நிலைபெற்றிருக்கும்.

எனவே நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை மற்றும் மரியாதையை உலகில் நிலைநாட்ட வேண்டும். மேலும் உலகில் இஸ்லாத்தின் உண்மையை வெளிப்படுத்தி அனைவரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தையும் நாம் கண் முன் நிறுத்தும்போது தான் இந்த முன்னறிவிப்பின் கீழ் நாம் ஜல்ஸா நடத்துவதும், அதனை மனனம் செய்வதும் பயனளிக்க முடியும். இன்று இஸ்லாத்தின் கொடியை உலகில் மீண்டும் பறக்கச் செய்வதற்கும், உலகில் இஸ்லாத்தை பரப்புவதற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களைத் தவிர வேறு எவரும் இல்லை. அல்லாஹ் நமக்கு இந்தப் பணியை செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு தப்லீக் மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்று வந்தது. அதில் ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தின்போது இந்த விஷயம் பதியப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதாவிற்காக ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு வியாழக்கிழமையன்று துல்கஃதா மாதத்திற்கு 6 நாட்கள் எஞ்சியிருந்தபோது புறப்பட்டார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னார் (ஸல்) அவர்கள் சனிக்கிழமையன்று புறப்பட்டார்கள்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 361 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதாவிற்கு செல்வதற்கு எண்ணம் கொண்டபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடத்தில் ஓர் ஒட்டகம் உள்ளது. நாம் அதில் வழிப்பாதை உணவை சுமத்திக் கொண்டு செல்வோம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள். இறைத்ததூதர் (ஸல்) அவர்கள், அவ்வாறே செய்யுங்கள் என்று கட்டளையிட்டார்கள். எனவே இறைத்தூதர் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஆகிய இருவரின் பொருட்களும் ஒரே ஒட்டகத்தில் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிது கோதுமையையும், சத்து எனும் உணவுப் பொருளையும் வழிப்பாதை உணவாக எடுத்துக் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் ஒட்டகத்தில் வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அதனை தனது அடிமையிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபீபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்வதற்கு புறப்பட்டோம். நாங்கள் அர்ஜ் என்ற இடத்தில் இருந்தபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சவாரியிலிருந்து இறங்கினார்கள். நாங்களும் இறங்கினோம். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள். மேலும் நான் எனது தந்தையின் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் பொருட்களும் ஒரே ஒட்டகத்தில் ஒன்றாக இருந்தது.

ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அவை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் அடிமையிடம் இருந்தது. அவர் வருவதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் காத்திருந்தார்கள். அந்த அடிமை வந்தார். ஆனால் அவருடன் அவருடைய ஒட்டகம் இருக்கவில்லை. உமது ஒட்டகம் எங்கே? என்று ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் கடந்த இரவிலிருந்து நான் அதனை தொலைத்து விட்டேன் என்று கூறினார். ஒரே ஒட்டகம் தான் இருந்தது. அதையும் நீ தொலைத்து விட்டாயே என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் அவரை அடிப்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் புன்னகைத்தவாறு, இந்த முஹ்ரிமைப் பாருங்கள்! இவர் என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்று கூறினார்கள்.

இப்னீ அபீ ஸிர்மா கூறுகின்றார்கள்: இந்த முஹ்ரிமைப் பாருங்கள்! என்ன செய்கின்றார்? என்பதை விட கூடுதலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறு எதையும் கூறவில்லை. மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் புன்னகைத்துக் கொண்டிருந்தார்கள்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 7 பக்கம் 12, 13 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிப்பாதை உணவு தொலைந்து விட்டது என்ற விஷயம் சில சஹாபிகளுக்கு தெரிய வந்தபோது அவர்கள் ஹீஸ் எனும் உணவை எடுத்து வந்தார்கள். ஹீஸ் என்பது பேரீத்தம் பழம், கோதுமை மற்றும் நெய்யால் தயாரிக்கப்படும் ஒரு வகை சிறந்த அல்வா ஆகும். அதனை அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள். தனது அடிமையின் மீது கோபப்பட்டுக் கொண்டிருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், அபூபக்ரே! மென்மையை மேற்கொள்ளுங்கள். இந்த விவகாரம் உமது கட்டுப்பாட்டிலும் இல்லை. எமது கட்டுப்பாட்டிலும் இல்லை. ஒட்டகம் தொலைந்து விடக் கூடாது என்பது இந்த அடிமையின் முயற்சியாக இருந்திருக்கும். ஆனால் தொலைந்து விட்டது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் அன்னார் (ஸல்) அவர்கள், இதை எடுத்துக் கொள்ளுங்கள். நமக்காக ஒரு தூய உணவு இதோ வந்து விட்டது. அல்லாஹ் இதனை அனுப்பியுள்ளான். இது அந்த அடிமையிடம் இருந்த நமது உணவிற்கு மாற்றாகும் என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அந்த உணவை உண்டனர். மேலும் அந்த இருவருடன் உணவு உண்டு வந்த மக்களும் அதனை உண்டனர். எந்த அளவுக்கென்றால் அனைவரும் மன நிறைவடைந்தனர்.

அதன் பிறகு ஹஸ்ரத் ஸஃப்வான் பின் முஅத்தல் வந்தார்கள். பயணக் குழுவிற்கு பின்னால் வருவது அன்னாரின் பொறுப்பாக இருந்தது. இஃப்க் சம்பவத்தில் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று பயணக் குழுவிற்குப் பின்னால் ஏதாவது பொருட்கள் கிடக்கின்றனவா? என்பதை பார்த்து வருவது அன்னாரின் பணியாக இருந்தது. ஹஸ்ரத் ஸஃப்பான் (ரலி) வந்தபோது ஒட்டகம் அன்னாருடன் இருந்தது. அந்த ஒட்டகத்தின் மீது வழிப்பாதை உணவும் இருந்தது. அன்னார் ஒட்டகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரத்தின் வாசலில் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உங்களது பொருட்களில் ஏதேனும் தொலைந்து விடவில்லையே என்பதை பாருங்கள் என்று கூறினார்கள். அதற்கு, நாம் தண்ணீர் அருந்தி வந்த ஒரு குவளையைத் தவிர வேறு எந்தவொரு பொருளும் தொலையவில்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, அந்த குவளை என்னிடமே உள்ளது என்று அடிமை கூறினார்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 365 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தில் அன்னார் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் ஹஜ் செய்வதற்காக புறப்பட்டார்கள். அன்னார் (ரலி) அவர்களுடன் அன்னார் (ரலி) அவர்களின் மனைவியான அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். எனவே அவர்கள் துல்குலைஃபா என்ற இடத்தை அடைந்தபோது அங்கு அஸ்மா அவர்களுக்கு முஹம்மது பின் அபீபக்ர் என்ற மகன் பிறந்தார். துல்குலைஃபா என்பது மதீனாவிலிருந்து 6, 7 மைல் தொலைவிலுள்ள ஓர் இடமாகும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் இவ்வாறு குழந்தை பிறந்த தகவலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கினார்கள். அப்போது அஸ்மாவிடம் குளிக்கும்படி கூறுங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். பின்னர் ஹஜ்ஜிற்கான இஹ்ராமை அணிந்து கொண்டு அனைத்துப் பணிகளையும் செய்து கொள்ளட்டும். அன்னார்

பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்ய வேண்டாம். அதைத் தவிர்த்து ஹாஜிகள் செய்கின்ற ஏனைய அனைத்து பணிகளையும் செய்து கொள்ளட்டும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 339 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உஸ்ஃபான் பள்ளத்தாக்கை கடந்து சென்றபோது அபூபக்ரே! இது எந்த பள்ளத்தாக்கு? என்று கேட்டார்கள். இது உஸ்ஃபான் பள்ளத்தாக்கு ஆகும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இங்கிருந்து ஹஸ்ரத் ஹூத் (அலை) மற்றும் ஹஸ்ரத் சாலிஹ் (அலை) ஆகியோர் இரண்டு சிவப்பு நிற ஒட்டகங்களில் சவாரி செய்திருந்தார்கள். பேரீத்தம் பழ மரத்தின் பட்டையாலான சாட்டை அவர்களிடம் இருந்தது. அங்கி அணிந்திருந்தனர். மேலே வெள்ளை நிற மற்றும் கருமை நிற போர்வையை உடுத்தி இருந்தனர். மேலும் தல்பியா கூறியவாறு பைத்துல் அதீக்கை ஹஜ் செய்வதற்காக கடந்து சென்றனர்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 8 பக்கம் 461 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஜ்ஜத்துல் விதா பயணத்தில் எந்த மக்களிடம் குர்பானிக்கான விலங்குகள் இருந்தனவோ அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

(அஸீரத்துன் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 369 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஜ்ஜத்துல் விதாவில் பார்த்தேன். சுஹைல் பின் அம்ர் பலி கொடுக்கும் இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குர்பானிக்கான விலங்கினை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் நிறுத்திக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது கரத்தால் அதனை பலியிட்டார்கள். பின்னர் தலையை மழிக்கின்றவரை அழைத்தார்கள். மேலும் தமது முடியை மழித்துக் கொண்டார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் சுஹைல் அவர்களை பார்த்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முடியை எனது கண்களால் தொட்டுக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு இந்த சம்பவம் நினைவிற்கு வந்து விட்டது. அதாவது இதே சுஹைல் தான் ஹுதைபியா உடன்படிக்கை நேரத்தில் அன்னார் (ஸல்) அவர்கள் உடன்படிக்கையில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று எழுதுவதிலிருந்து தடுத்துக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அல்லாஹ்வின் புகழையும், மேன்மையையும் எடுத்துரைத்தேன். அந்த அல்லாஹ் சுஹைலிற்கு இஸ்லாத்தின் பக்கம் நேர்வழி வழங்கியுள்ளான்.

(சுபுலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 64 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் நேர்வழி வழங்கியபோது பின்னர் அவர் தூய்மையிலும், நன்றியுணர்விலும் எல்லையற்ற முன்னேற்றத்தைக் கண்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்ட இறுதி நாட்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை தொழுகை நடத்துவதற்கு வழிகாட்டியது தொடர்பாக குறிப்பு வருகின்றது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது நோயின் நிலையில், மக்களுக்கு தொழுகைகளை நடத்துமாறு (இமாமத் செய்யுமாறு) அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தங்களது இடத்தில் நிற்கும்போது அழுகையின் காரணமாக மக்களுக்கு வசனங்களை ஓதிக்காட்ட மாட்டார். எனவே மக்களுக்கு தொழுகை நடத்துமாறு தாங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறுங்கள் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: பின்னர் நான் ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறும்படி கூறினேன். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இடத்தில் நிற்கும்போது அழுகையின் காரணமாக மக்களுக்கு அன்னாரால் வசனங்களை ஓதிக்காட்ட முடியாது. எனவே மக்களுக்கு தொழுகை நடத்தும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற வேண்டும்.

ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் அவ்வாறே செய்தார்கள். அப்போது அமைதியாக இருக்கவும் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபமடைந்தார்கள். நீங்கள் யூசுஃபின் பெண்கள் ஆவீர்கள். அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறுங்கள். அவரே மக்களுக்கு தொழுகை நடத்த வேண்டும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அஸான், ஹதீஸ் எண் 679)

மரணத்திற்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோயுற்றிருந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இல்லாத சமயத்தில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தொழ வைக்கும்படி கூறி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரல் அறையில் சென்றடைந்தபோது அபூபக்ர் எங்கே இருக்கின்றார்? அபூபக்ரை தவிர்த்து வேறு ஒருவர் தொழ வைப்பதை அல்லாஹ்வும், முஸ்லிம்களும் விரும்பவில்லை என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகை நடத்தி முடித்த பிறகு அன்னார் வந்தடைந்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோயுற்றதிலிருந்து அன்னார் (ஸல்) அவர்களின் மரணம் வரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே தொழுகை நடத்தி வந்தார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 96, 97 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது நோயின் நிலையில் நீங்கள் மக்களுக்கு தொழுகை நடத்துங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள் மக்களுக்கு தொழுகை நடத்தி வந்தார்கள்.

உர்வா இவ்வாறு கூறி வந்தார்கள்: அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது நோயின் நிலையில் சிறிது முன்னேற்றத்தை உணர்ந்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் வெளியில் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முன்னால் நின்று கொண்டு மக்களுக்கு தொழுகை நடத்திக் கொண்டிருந்ததை அன்னார் (ஸல்) கண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களை பார்த்தபோது பின்வாங்கினார்கள். அப்போது நீங்கள் உங்களது இடத்திலேயே இருங்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் சைகை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு சமமாக அன்னாருக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொழுகையுடன் சேர்ந்து தொழுதார்கள். மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தொழுகையுடன் சேர்ந்து தொழுதார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அஸான், ஹதீஸ் எண் 683)

இது புகாரியின் அறிவிப்பாகும். சஹீஹ் புகாரிலேயே மற்றோர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்த அந்த நோயின் நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு தொழுகை நடத்தி வந்தார்கள். எந்த அளவுக்கென்றால் திங்கட்கிழமை வந்தபோது அன்னார் தொழுகையில் வரிசைகளில் இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறையின் திரையை அகற்றினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் எங்களை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் எழுந்திருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகம் திருக்குர்ஆனின் பக்கத்தைப் போன்று இருந்தது. பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியடைந்து புன்னகைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்த்ததன் காரணமாக நாம் மகிழ்ச்சியினால் சோதனையில் வீழ்த்தப்பட்டு விடுவோம் என்ற எண்ணம் எங்களுக்கு உண்டானது.

இந்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சற்று பின்னால் நகர்ந்தார்கள். ஸஃப்புடன் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக வெளியே வருகை தருகின்றார்கள் என்று

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 31 March 2022 Issue No. 13

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்னார் புரிந்து கொண்டார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சைகை செய்து உங்களது தொழுகையை முழுமை செய்யுங்கள் என்றே கூறினார்கள். மேலும் திரையை போட்டுக் கொண்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் அதே நாளன்று மரணித்து விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அஸான், ஹதீஸ் எண் 680)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முதல் அறிவிப்பிற்கேற்ப ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நோய்க்கு ஆளாகி இருந்தபோது கடுமையான பலவீனத்தின் காரணமாக தொழுகை நடத்துவதற்கு ஆற்றல் பெற்றிருக்கவில்லை. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தொழுகை நடத்தும்படி கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொழுகை நடத்த தொடங்கியபோது அன்னார் (ஸல்) அவர்கள் சிறிது நிம்மதியை உணர்ந்தார்கள். மேலும் தொழுகைக்காக புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தொழுகை நடத்தும்படி கட்டளை வழங்கிய பிறகு தொழுகை ஆரம்பமாகி விட்டது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் நோயில் சிறிது தளர்வை உணர்ந்தார்கள். எனவே இரண்டு நபர்கள் அன்னார் (ஸல்) அவர்களை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தற்போது எனது கண்களுக்கு முன்னால் அந்த காட்சி உள்ளது. கடுமையான வலியின் காரணமாக அன்னார் (ஸல்) அவர்களின் பாதம் நிலத்தை தொட்டுக் கொண்டு சென்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்த்ததும் பின்னால் விலகி வருவதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எண்ணம் கொண்டார்கள். இந்த எண்ணத்தை அறிந்து கொண்டு உங்களது இடத்திலேயே இருங்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி சைகை செய்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் அங்கு கொண்டு வரப்பட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அமர்ந்து கொண்டார்கள். அதன் பிறகு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொழத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களின் தொழுகையுடன் சேர்ந்து தொழத் தொடங்கினார்கள். ஏனைய மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தொழுகையை பின்தொடர்ந்து தொழுதார்கள்.

(சீரத்துன் நபி (ஸல்), அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 506, 507)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் தொடர்பாக ஓரிடத்தில் உர்வா பின் சுபைர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய இணையரான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த நேரத்தில் சுன்ஹ் என்ற இடத்தில் இருந்தார்கள். அதாவது சுன்ஹ் என்பது சுற்றுவட்டாரத்திலுள்ள ஒரு கிராமம் ஆகும். இந்த செய்தியை செவியுற்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். ஹஸ்ரத் நபிகம் நாயகம் (ஸல்) அவர்களின் மரணச் செய்தி வந்தடைந்தபோது அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருந்திருக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தான் அப்போது அங்கு இருந்தார்கள். அன்னார் எழுந்து நின்று, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனது உள்ளத்திலும் அதே விஷயம் தான் தோன்றியது. அதாவது அல்லாஹ், அன்னார் (ஸல்) அவர்களை நிச்சயம் எழுப்புவான். ஏனென்றால் அன்னார் (ஸல்) அவர்கள் சில நபர்களின் கை, கால்களை வெட்ட வேண்டியதுள்ளது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் முகத்திலிருந்த துணியை விலக்கினார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களை முத்தமிட்டார்கள். மேலும் எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணம் என்று கூறினார்கள். தாங்கள் உயிருடன் இருந்தபோதும், மரணத்தின்போதும் தூயவராக இருக்கின்றீர்கள். எந்த இறைவனின் கைகளில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் தங்களுக்கு ஒருபோதும் இரண்டு மரணங்களை காட்ட மாட்டான் என்று கூறியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வெளியே வந்து விட்டார்கள். பின்னர் சத்தியம் செய்பவரே! சற்று நில்லும் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சற்று பொறுமையாக நிற்கும்படி கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பேசத் தொடங்கியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அமர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைவனின் புகழை எடுத்துரைத்தார்கள். மேலும்

أَلَا مَنْ كَانَ يَعْبُدُ مُحَمَّدًا صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
فَإِنَّ مُحَمَّدًا قَدْ مَاتَ، وَمَنْ كَانَ يَعْبُدُ اللهَ فَإِنَّ اللهَ حَيٌّ لَا يَمُوتُ

என்று கூறினார்கள்.

பொருள்: முஹம்மது (ஸல்) அவர்களை எவர் வணங்கி வந்தாரோ அவர் கேட்டுக் கொள்ளட்டும். முஹம்மது (ஸல்) நிச்சயமாக மரணித்து விட்டார்கள். எவர் அல்லாஹ்வை வணங்கி வந்தாரோ அவர் நினைவிற் கொள்ளட்டும். அல்லாஹ் உயிருள்ளவன் ஆவான். அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான்.

மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் إِنَّكَ مَيِّتٌ وَّإِنَّهُمْ مَّيِّتُوْنَ என்ற வசனத்தை ஓதினார்கள்.

பொருள்: நீங்களும் மரணிக்கக் கூடியவர்கள் ஆவீர்கள். அவர்களும் மரணிக்கக் கூடியவர்கள் ஆவார்கள்.

பின்னர் அன்னார் وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ۗ أَفَإِنْ مَّاتَ أَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلَىٰ أَعْقَابِكُمْ ۗ وَمَنْ يَّنْقَلِبْ عَلَىٰ عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللهَ شَيْئًا ۗ وَسَيَجْزِي اللهُ الشّٰكِرِيْنَ என்ற வசனத்தை ஓதினார்கள்.

பொருள்: முஹம்மது (ஸல்) ஒரு தூதரே அன்றி வேறில்லை. அன்னாருக்கு முன் தோன்றிய அனைத்து தூதர்களும் மரணமடைந்து விட்டனர். அவ்வாறிருக்க அன்னார் மரணமடைந்து விட்டாலோ அல்லது கொலை செய்யப்பட்டு விட்டாலோ நீங்கள் புறமுதுகு காட்டி ஓடி விடுவீர்களா? எவரொருவர் புறமுதுகு காட்டி ஓடி விடுவாரோ அவரால் அல்லாஹ்விற்கு ஒருபோதும் நஷ்டத்தை ஏற்படுத்த முடியாது. நன்றி செலுத்தக் கூடியவர்களுக்கு அல்லாஹ் மிக விரைவில் நற்கூலி வழங்குவான்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இதைக்கேட்ட மக்கள் எந்த அளவிற்கு அழுதார்கள் என்றால் தொண்டை அடைத்து விட்டது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாப் (ஸல்), ஹதீஸ் எண் 3667, 3668)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அப்போது எங்களுக்கு எப்படி தோன்றியது என்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த வசனத்தை படிக்கும் வரை அல்லாஹ் இந்த வசனத்தையும் இறக்கி இருந்தான் என்பதை மக்கள் அறிந்திருக்கவில்லை. ஆக அனைத்து மக்களும் அன்னாரிடமிருந்து இந்த வசனத்தை கற்றுக் கொண்டார்கள். பின்னர் அனைத்து நபர்களும் இந்த வசனத்தையே ஓதிக் கொண்டிருப்பதை நான் செவியுற்றேன்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்...)

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad